# கட்டுரைக் கதம்பம்



9 10ஆம், 11ஆம் ஆண்டுக்குரியது

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரைக் கதம்பம்

## 10ஆம் 11ஆம் ஆண்டுக்குரியது

ஆக்கியோர்:
ஆனந்த சாரங்கா
(சங்கத்தானை,
சாவகச்சேரி.)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 60 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு—1997 மார்ச்

பதிப்புரிமை: ஆசிரியருக்கே.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B. A. தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எந்த ஒரு விடயத்தையும் அறிந்து தெளிந்து கொள்ள வும் அதைச் செவ்வனே வெளிப்படுத்தவும் மொழியே ஊடகமாகி உதவுகின்றது. ஆதலால், கற்றலை விருத்தி செய்வதற்கு மொழியறிவின் விருத்தி முதற்படியாக அமை கின்றது.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவு சொற் தொகுதியை ஒழுங்காகப் பயன்படுத்தி வேறுபட்ட பல விடயங்களையும் விபரிக்கின்ற ஆற்றலைக் கட்டுரை எழுதும் பயிற்சி விருத்தி செய்கின்றது. இதற்கேற்ப இந்நூல் பல் வேறுபட்ட தலைப்புகளை வரையறுத்த அளவில் மூன்று பக்கங்கள் கொண்ட கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

இளைய தலைமுறையினரின் தமிழறிவை ஆழமாக்க, அகலமாக்க உதவும் வகையில் இரட்டையராகி நாம் இக் கட்டுரைக் கதம்பத்தை ஆக்கியுள்ளோம்.

இந்த ஆக்கங்களை வாசித்து உள்வாங்கிக் கொள்வது டன் மேலும் பல கட்டுரைகளைத் தாமாகவே முயன்று எழுதுவதன் மூலம் சிந்தனைத் திறனையும் வெளிப்படுத் தும் சொல்லாட்சியையும் வளர்த்து நன்மை பெறுவதையே நூல் நோக்காகக் கொண்டுள்ளது.

இப்புத்தகத்தை எழுத ஆலோசனை வழங்கியவர்களுக் கும் அழகுற அச்சிட்டு வெளியிட உதவிய ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

10-02-1997 — ஆனந்த சாரங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மனித வாழ்வில் இறைநம்பிக்கை | 1 |
| 2. | தானத்திற் சிறந்தது வித்தியாதானம் | 4 |
| 3. | விடியற் பொழுதினிலே | 7 |
| 4. | எனது பாடசாலையில் நிகழ்ந்த தமிழ்த்தினவிழா | 10 |
| 5. | நம் வாழ்வு நலம்பெற நல்லன செய்வோம் தீயன விலக்குவோம் | 13 |
| 6. | நான் திருவள்ளுவரைச் சந்தித்தால் | 16 |
| 7. | தமிழின் பெருமை | 19 |
| 8. | ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் | 22 |
| 9. | அனாதைச் சிறுவனின் சுயசரிதை | 25 |
| 10. | பாடசாலைகளில் சமயவிழா கொண்டாடுவதன் அவசியம் | 28 |
| 11. | அழகுக் கிராமமும் அகோர சூறாவளியும் | 31 |
| 12. | விஞ்ஞானமும் வாழ்வும் | 34 |
| 13. | விலங்கு வாழ்வும் மனித வாழ்வும் தாவரங்களிலேயே தங்கியுள்ளது | 37 |
| 14. | அறுவடைக்காட்சி | 40 |
| 15. | உள்ளத்தனையது உயர்வு | 43 |
| 16. | நான் பயணம் செய்த கப்பல் பாறையில் மோதிச் சிதறியபோது | 46 |
| 17. | நான் ஓர் எழுத்தாளரானால் | 49 |
| 18. | சூழல் மாசடைதல் | 52 |
| 19. | தொலைக்காட்சியால் நிகழும் நன்மைகளும் தீமைகளும் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 20. | நான் சந்தித்த விநோத மனிதன் | 58 |
| 21. | நான் கண்ட கனவு | 61 |
| 22. | நான் விரும்பும் பெரியார் | 64 |
| 23. | கதிரையின் சுயசரிதை | 67 |
| 24. | பிறந்த நாள் வாழ்த்து | 70 |
| 25. | துணை ஆசிரியர் பதவி | 72 |
| 26. | அனுதாபக்கடிதம் | 73 |
| 27. | அனுப்பாணைக் கடிதம் | 75 |
| 28. | முறைப்பாட்டுக் கடிதம் | 77 |
| 29. | நன்றியறிவித்தல் கடிதம் | 79 |
| 30. | விளம்பரம் | 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் இறைநம்பிக்கை

தொடக்கமும் முடிவும் இல்லாது அநாதியாய் அகன்று விரிந்திருக்கின்றது பிரபஞ்சம். அதில் தன்னுணர் வில்லாத சிற்றுயிர்கள் முதல் தன்னை உணரத் துடிக்கின்ற மனிதன் வரையாக கணக்கில்லா உயிர்கள் கணந்தோறும் உயிர்க்கின்றன: மடிகின்றன. இவ்வாறாக உயிரையும் உலகையும் படைத்து, பக்குவமாய்க் காத்து, காலக் கரைவில் அழித்து அகிலத்தைப் பரிபாலித்தற்கு யாதோ ஒரு அள விறந்த சக்தியே காரணமென நம்புகின்றனர் உலகோர். மனித சக்திக்கும் மிக மேம்பட்டு, மானிடன் முதல் நுண் ணிய மண்புழு ஈறாய் பரிபாலிக்கின்ற அந்த சக்தியையே நாம் 'கடவுள் என்கின்றோம்.

உடல் கடந்து, உளம் கடந்து உயிரோடு ஒன்றி நிற் கும் இச் சக்தியின் வணக்கம் நமக்கு வழிகாட்டுகின்றது. வாழ்க்கைப் பாதைக்கு ஒளியூட்டுகின்றது. வாழும் நாள் களில் களிப்பூட்டுகின்றது. வாணாளின் பின்னரும் ஆத்மா வுக்கு அமைதியைத் தருகின்றது

புல்லும் பூடும் புழுவும் மரமும் பரிணமித்த பாதை யில் தோன்றிய மனிதன் தன்னைச் சூழவிருந்த இயற்கைச் சக்திகளின் முன்பு தான் ஓர் அற்ப உயிரி என்பதை உணர்ந் தான். கார்கால இடி கேட்டு, காற்றின் சுழல் பார்த்துக் கலங்கினான். வானைக் கிழிக்கும் மின்னலும், தரையை நிரப்பும் மழையும் அவனைத் தடுமாற வைத்தன. ஆற்றல் ஒடுங்கிய அந் வேளையில் அச்சம் பிறந்தது.

வெல்ல முடியாத இயற்கைக்கு அடிபணிவதே தன்னைக் காக்கும் வழி என மனிதன் நம்பினான். நம்பிக்கை வளர வளர 'பக்தி' பிறந்தது. தீயையும், காற்றையும், தகிக் கும் கதிரையும், மழையையும் தொழுதான். ஒவ்வொரு சக்தியையும் ஒவ்வொரு தேவனாக, தேவதையாக உரு வகித்தான். ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லாத அந்தச் சக்திக்கு திருநாமம் ஆயிரமிட்டுத் தொழுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரமுடியாத அந்த சக்தியை. உணர்வுகளை ஒன்றாக்கி வணங்கினான் மனிதன். தானும் தன் சொந்தமும் பங்கம் ஏதுமின்றி வாழ வரம் கேட்டான். நம்பிக்கைகள் அவனுக்குக் கை கொடுத்தபோது எல்லையில்லாத அந்த இயற்கை சக்தியே தன்னை வழிநடத்தியதாக மனமுருகி நின்றான். நன்றி செலுத்துவதற்காய் விழாக்களை எடுத்தான்.

காலங்கள் செல்லச் செல்ல தனி மனிதன் சமூக வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டான். சமூக வாழ்க்கையில் மனிதன் பற்பல நயங்களைச் சந்தித்தான். ஆயினும் இடையிடையே அவன் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டியிருந்தது. அச்சத்தின் பொருட்டு அடிபணிந்த மனிதன் தன் அன்றாட வாழ்வின் சிக்கல்களைத் தீர்க்கவும் அச்சக்தியை நாடினான்.

இயற்கையை வென்று, இன்னொரு கோளிலும் கால் வைக்கத் துணிந்துவிட்ட இன்றைய நாளிலும் மனிதன் அச்சக்தியின் மகத்தான ஆற்றலை மறந்துவிடவில்லை. மாறாக 'இறைவழிபாடு' மனித குலம் பெற்ற சிறந்த பாரம்பரியமாக வழங்கி வருகின்றது. ஒரே காலத்தில், உலகின் வெவ்வேறு பிரதேசங்களில் வளர்ந்த இறை நம்பிக்கையானது, ஒரே சக்திக்கு வெவ்வேறு மக்களால் வெவ்வேறு வடிவம் கொடுக்க வைத்தது. இதனால் மதங்கள் மக்களுடன் வேறுபட்டன. வழிபடும் முறைகளும் மதங்களுக்கேற்ப மாறுபட்டிருந்தன. ஆயினும் நம்பிக்கை மட்டும் ஒன்றானதாகவே இருக்கின்றது.

உலகின் மூலைகள் ஒரு நொடிப் பொழுதில் ஒன்றுடனொன்று தொடர்புகொள்ளும் இன்றைய தொழினுட்பயுகம் இன்னும் தொலை தூரமான இலக்குடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மனித வரலாறு என்ற நாணயத்தின் ஒரு பக்கம் சாதனைகளும், சந்தித்த வெற்றிகளும் அந்த மற்று நீள்கின்றன. ஆயினும் மறுபக்கமோ மனிதகுலத்தை தலைகுனிய வைக்கின்றது. ஆம்! வறுமையும், போரும், வஞ்சக ஆட்சிகளும் மனித வாழ்வில் விரக்தியை ஏற்படுத்துகின்றன வாழ்வில் வெறுப்பையும், வேதனையையும் சலிப்பையும் சேர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இரு மாறுபட்ட நிலைகளினிடையே சிக்கித் தவிக்கின்றது இன்றைய மனிதகுலம். துன்பம் செறிந்த பாதைகளின் முடிவுக்கு இறைசக்தி ஒன்றே உறுதுணையாகும் என்று இன்றைய மனிதனும் உணர்ந்துவிட்டான். தன்னைத் தானே வழிநடத்திய வேளைகளில் இருளான பாதைகளில் சென்று தடுமாறி விழுந்ததைத் தெளிந்து கொண்டான். தன் பயணத்தின் ஒளியாக இறைசக்தியைப் புரிந்துகொண்டான்.

பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகளைப் பேணிக் காக்கும் கீழைத் தேயம் மட்டுமல்லாமல் இவற்றை ஏறத்தாழ மறந்தே போய்விட்டிருந்த மேலைத் தேயமும் அந்த மாண்புமிகு சக்தியை உணரத் தொடங்கிவிட்டது. எண்ணத்துக்கு எட்டாத ஆற்றலுள்ள அச்சக்தியின் மீதுள்ள நம்பிக்கையும் அமைதியும் ஆனந்தம் அளிக்கின்ற அருமருந்து என்பதை மனிதன் உணர்ந்துவிட்டான்.

பல் கிளைகளாய்ப் பிரிந்து சென்றாலும் நதியொன்று இறுதியில் ஒரு கடலை அடைவதைப் போல, பேதங்கள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் எல்லா மதங்களும் அற்புதமான இறைசக்தியை உணர்வதற்கே வழிகாட்டுகின்றன.

கடினமான வாழ்க்கைப் பாதையைக் கடக்கின்ற வல்லமையை இறை வழிபாடு தருகின்றது. களிப்பு நிறைந்த காலங்களும் வாழ்வினில் எதிர்கொள்ளும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றது. சோதனை மிக்க காலங்களில் சுமைகளை இறக்கிவைத்து ''அவன் செயலே இஃது'' என்று ஆறுதற்பட வைக்கின்றது. நெறி தவறி, நீதி கெட்டு, வழி பிறழ்ந்து போகாமல் வாழ்க்கைப் பாதையை வரம்பிட்டுக் காக்கின்றது. சிந்தையைச் சீர்செய்கின்றது.

மனிதனால் உருவாக்கப்பட்ட பேதங்களுக்கு அப்பால், ஒன்றேயாகி நிற்கின்ற இறை நம்பிக்கை ஒவ்வொரு தனி மனித வாழ்வையும் வழிநடத்துகின்றது. இத்தகு மேன்மையுள்ள இறை நம்பிக்கையை உறுதுணையாகக் கொண்டு வாழ்வை வளம்படுத்துவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானத்திற் சிறந்தது வித்தியாதானம்

உடையோர் இல்லாதார்க்கு உவந்தளித்தல் 'தானம்' எனப்படும். மண்விளை தானியங்கள் உண்ணும் உணவாக அளிக்கப்படுகின்றது. கண்ணும் குருதியும் எண்ணற்கரிய உயிர்களின் ஊனத்தைத் தவிர்க்க, தானமாக அளிக்கப்படுகின்றன. உடலைக் காத்து உன்னதப் பணி புரிகின்றன. ஆனால், உயிரைக் காத்து உறுதுணையாய் ஓம்புகின்ற தானமும் ஒன்றுண்டு. தானங்களுள் தலை சிறந்தது; தரணியிலே விலை மதிப்பற்று விளங்குவது; அதுவே வித்தியா தானமாகும்.

மனம் நிறை வித்தையை மற்றவர்க்கு ஈதலே வித்தியா தானமாகும் கல்லாதவர் ஒன்றும் இல்லாதவர்க்கு ஒப்பாவார் என்கின்றார் செந்நாப் போதார் திருவள்ளுவர். மண்ணுலகில் மாண்புடன் வாழ வகை செய்வது கல்வி. எண்ணுகின்ற பிறவி ஏழிலும் பின் தொடர்வது முன்கற்ற கல் என்கின்றார் அவர். ஆதலால் எழுமையும் ஏமாப்புடைத்த இனிய கல்வியை ஈதலே மிகப் பெரிய கொடை என்பது மிகையாகாது.

கல்வியறிவு தங்கி நில்லாத ஒருவனிடத்து நல்லதையும் அல்லதையும் பகுத்துணரும் வல்லமை இருப்பதில்லை. கல்லாதவன் முகத்தில் கண்கள் இருப்பதில்லை; அவை இரண்டு புண்களே ஆகின்றன என்கிறது திருக்குறள். இதனால் கண்ணில்லாத கபோதியொருவனுக்கு கண்ணை வழங்கிப் புற ஒளியை ஊட்டுவதைவிட. அறிவாகிய ஞான ஒளியை அவனிடத்து நாட்டுவதே சிறந்ததெனச் சாற்றுகின்றனர் பெரியோர்.

கல்வியாகிய அறிவு, கேட்கப்படும் போது அவை செவிக்கு நல்விருந்து ஆகின்றன. அறிவுப் பசியைத் தீர்க்கின்றது செவிக்கு இவ்வுணவு இல்லாத போதே வயிற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியை ஆற்றும் அன்னம் வேண்டும் என்கின்றது சிறுகுறள். கேள்வியாகிய கல்வி நினைவுகளை நிரப்புகின்றது. உணர்வுகளை முழுமையாக்க உறுதுணை ஆகின்றது.

இதையே, உதரத்துக்கு உணவு வழங்கி ஓராயிரம் பேருக்கு பசி தீர்ப்பது பெருமையல்ல; இல்லாத ஒருவனின் கல்லாமை நீக்குதலே ஒப்புயர்வு இல்லாத அறம் என்கின்றான் பாரதி. அன்னசத்திரம் ஆயிரம் அமைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிக்கக் கோருகின்றான்.

எத்துணை செல்வமுடையவன் ஆயினும், கல்வி இல்லாதவன் ஏழையாகவே எண்ணப்படுகின்றான். கேடில் செல்வமாகிய கல்வி இம்மையில் நல்வழி வகுத்துத்தருகின்றது. தீவினை களைந்து உயர்வினைத் தருகின்றது. தர்மங்களை மேற்கொண்டு தானுயர வழிசெய்கின்றது தன் சுற்றம் யாவும் தரணியில் பெரும் நிலை அடைய உதவுகின்றது. இதன் மூலம் மறுமையிலும் மாண்புள்ள நிலையடைய உறுதுணை ஆகின்றது.

இன்னும், புறத்தே உணரப்படுகின்ற தானங்கள் யாவும் பூதங்கள் ஐந்தினாலும் அழிக்கப்படத்தக்கவை. நிலையாத உடலோடு நீத்துவிடும் இயல்புடைத்தவை. உடல் அழியும்போது உடல் கொண்ட தானமும் அழிந்துவிடும். கொடுத்தவர்க்கு மட்டுமே அத்தானம் தர்மமாய் நிலைத்திருக்கும். ஆனால் கல்வி தானமாய் வழங்கப்படும்போது அதைப் பெற்றவர் பிறவிகள் ஏழிலும் பயன் பெற்றிருக்க முடியும். கொடுத்தவர்க்கும் தர்மம் நெடுந்தூரம் தொடர்ந்து வரும்.

உலகியல் பொருள் யாவும் வழங்கப்படும் வேளையின்பின், கொண்டவர்க்கு உரிமையாகி அவர் பொருளின் அளவினைக் கூட்டுகின்றது. கொடுத்தவர்க்கு இல்லாததாகிக் குறைகின்றது. கொடுத்தாலும் குறையாத பெருஞ்செல்வமாய்ப் பெருகுவது கல்விச் செல்வம் ஒன்றேதான். கொண்டவர்க்கும் கொடுத்தவர்க்கும் குறைவில்லாமல் பெருகுவது கறையற்ற கல்வியின் தானமேயாகும். ஆதலால் கற்றவர்க்கும் கற்பித்தவர்க்கும் உற்றதுணையாக நின்று நற்றவப் பேறை நல்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாத ஒருவன் மானிடனாயினும் அவன் விலங்கெனவே கருதப்படுகின்றான்.

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரொடு ஏனையவர்''

என்கின்றது ஈரடிக்குறள். பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் கூட கல்லாதவிடத்து விலங்கென்ற கணிப்பையே பெறுகின்றனர். கல்லாதவர் மாக்களென்று தாழ்த்தி வைக்கப்படுகின்றனர். ஐம்புலனும் ஆறறிவும் செம்மையாகப் பெற்றிடினும் இம்மையில் மக்களென்று போற்றப்படுவதற்கு மனம் வளர்க்கும் கல்வியே அவசியமாகின்றது.

ஆதலால் கல்லாத ஒருவனுக்கு கல்வியை வழங்குதலானது, மானிடனான ஒருவனை மாண்புகள் மிக்க மனிதனாகப் படைக்கின்ற பெருமையுடைத்ததாகும். இதனாலன்றோ எழுத்தை அறிவித்தவன் இன்னொரு இறைவனாகப் போற்றப்படுகின்றான். இவ்வுலக வாழ்வின் வழிகாட்டியாக வாழ்த்தப்படுகின்றான்.

கல்வி ஆத்மாவுக்கு அமைதியைத் தருகின்றது. ஆனந்தமான வாழ்வுக்கு அடிகோலும் அத்திவாரமாகின்றது. நித்திலத்தில் நீடுபுகழ் பெற்று நிலைத்திருக்க உதவுகின்றது. அறநெறி நின்று தவநெறியில் ஒழுக உறுதுணையாகின்றது. அழிவற்றதாக உயிரோடு தொடர்ந்து நின்று ஆக்கம் பல விளைக்கிறது. ஆதலால் இத்துணை பெருமையுடைத்த கல்வியை இல்லையெனாது ஈதலே தலைசிறந்த தானமெனக் கொள்வது தக்கதேயாகும்.

''கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியற் பொழுதினிலே...

ஒருநீல வானம் வெண்மைக்கு உருமாறிக் கொண்டிருக்கிறது. காலைக் காட்சி உதயமாகிக் கொண்டிருக்கிறது. கனத்த இருள் விலகும் அவ்வேளை கிழக்குத் திசை வெளிக்கத் தொடங்குகிறது. கொடியில்லாத தனி முல்லைப் பூப்போல, விடிவெள்ளி வானில் காட்சியளிக்கிறது. உருண்டு போன இரவில் கண்ட எண்ணற்ற ஒளிப்பூக்கள் அத்தனையும் எங்குதான் போய் ஒளிந்து கொண்டனவோ? தண்ணிலா தன் கடமை முடித்து மேற்றிசையில் மறைகிறது. சின்னஞ்சிறு சிட்டுக்கள் தம் சிருங்காரக் குரலில் கீதமிசைக்கின்றன. வண்ணப் பட்சிகள் சிறு வீணை மீட்டினாற் போல மிழற்றுகின்றன பலவித பறவைகளும் ஒலிசெய்வது சப்தஸ்வரங்களும் சேர்ந்தொலித்தாற் போலத் தோன்றுகிறது. கீழ்த்திசை மெல்லச் சிவக்க சிற்றொளி பரவத் தொடங்குகிறது. ஆம்! பால சூரியனின் பேரழகுப் பவனி ஆரம்பமாகின்றது

''செங்கதிரோனே! வருக வருக'' எனக் கட்டியம் கூறுவது போல் சேவல்கள் சிறகடித்துக் கூவுகின்றன. கதிரவனை வரவேற்றுக் களிப்புடன் காகங்களும் கரைகின்றன. வண்ணப் பறவைகள் கானமிசைக்க வானவெளிப் பரப்பிலே வடிவழகுச் சூரியன் மிதந்து வருகின்றான். இதழ் இமைகள் மூடிக் கிடக்க மொட்டுப் பருவத்து மஞ்சள் அலரிகள் அலரவன் வருகைக்காக மோனத் தவமியற்றுகின்றன.

ஒளி விரித்த உதயனின் வருகையில் சிறுபூக்கள் நாணுகின்றன. அவை தளிரிலையில் தம்முகம் பார்த்துக்கொள்ளும் அழகு மனத்தை அள்ளுகின்றது. இலைகளில் உறங்கும் பனித்துளிகள் வைரமணிகளாய் ஜொலிக்கின்றன. அமைதியின் ஆட்சி மெதுவாக விலகத் தொடங்குகிறது. ஆலயமணியின் ஆத்மநாதம் காலைப் பொழுதுக்குத் தெய்வீகம்சேர்க்கின்றது. மெல்லிளம் தென்றல் அதிகாலைவேளைக்குக் குளிர்மையைக்கொடுக்கின்றது. 'பரிதிக் கோளத்தின் பசுங்கதிர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவுகின்றன. பெரு மரங்கள் தம்நிழலை நிலமகளில் பதிக்கின்றன. மென்னீல வான் பரப்பில் தினகரன் தன்பயணம் தொடர்கிறான்.

அதோ! ஒரு வயற்கரையோரத்தில் விடியற்பொழுதின் புலர்வு காண்போம். இயற்கை அன்னை உடுத்தியுள்ள பசுங்கம்பளமோ அன்ன நெற்பயிர்கள் செழித்துக் கிடக்கின்றன. பொற் கிரகணங்களை வாரி வீசியபடி பகலவன் மேலெழுகின்றான் பசுமையுடன் பொன் மஞ்சள் ஒளி சேர வர்ணனைக்கு எட்டாத வடிவழகுடன் புதுவர்ணம் தோன்றுகின்றது. அக்கோலத்தின் அழகுதான் எத்துணை அற்புதமானது! பழனத்தில் பதர்க் கதிர்கள் பகலவன் முகம் பார்த்துச் சிரிக்கின்றன. நெல்மணி சுமந்த பயிர்கள். தாய்மை அழகு பெருகத் தலை குனிந்து நிலம் நோக்குகின்றன. குறைகுடங்கள் தளும்புகின்ற, நாமறிந்த தத்துவம் அங்கு பரிணமிக்கின்றது. இவற்றில் கண்செலுத்தாது மண்ணுலகின் ராஜகுமாரன் தன்பயணம் தொடர்கிறான்

தெள்ளிய நீர் சுமந்த ஓடைகள் வெள்ளிக் கதிர்கள் புகுந்தாற்போல புது அழகுடன் பொலிகின்றன. அங்கு தங்கச் சிமிழ்கள் போலக் கிடந்த தாமரை மொட்டுக்கள் செங்கதிர் தீண்டத் தம்முகம் மலர்த்துகின்றன. குமுத மலர்களோ கதிரவன் வரவில் குமுறிக் குவிகின்றன ஒருவர் இன்பமுற இன்னொருவர் துன்பமுறும் இயற்கை உண்மை அங்கே அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

வயல் வரப்போரங்களில் உழவர்கள் தம் ஆவினங்களுடன் சென்று கொண்டிருக்கிறார்கள். பயணத்தில் தன் சேய் பிந்தியது கண்டு தாய்ப்பசு தவிப்புடன் குரல் கொடுக்கிறது. அந்த ''ம்மா'' என்ற ஓசையும் காலைப் பொழுதிற்கு மங்களம் சேர்க்கிறது. சேற்று நீருள் சிறுமீன்கள் சந்தோஷமாய் விளையாடுகின்றன. இரைதேடும் கொக்குகள் நிரையாகப் பறக்கின்றன. சகல வரவேற்புக்களையும் ஓர் அலட்சியத்துடன் ஏற்றுக்கொண்டு கதிர்ச்செல்வன் கம்பீரமாய் வான்முகட்டில் மேலேறுகிறான்.

மனித உலகம் மெதுவாக விழிக்கத் தொடங்குகிறது. துள்ளும் நடையுடன் துடியிடையில் குடத்துடன் நங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் நீராடச் செல்கின்றனர். விவசாயிகள் மண் தந்த விளைச்சலுடன் சந்தை செல்கின்றனர். கிராமத்து வீதிகளில் வண்டில் மணியோசை இனிதாக எழும்புகின்றது. மனைத் தலைவர்கள் தத்தம் வேலைத் தலம் நோக்கி விரைகின்றனர். பள்ளிச் சிறுவர்களின் முகங்களில் காலைப் பொழுதின் உற்சாகம் பரந்து கிடக்கின்றது. உஷத் காலப் பூஜைக்காகப் பூத்தட்டுக்களுடன் பக்தர்கள் கோயிலை நோக்கி நடக்கின்றார்கள். மனைத் தலைவியர் அவசரகதியில் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

புது நாளின் மலர்வு உயிரினங்களில் உற்சாகத்தைப் பிறப்பிக்கும் அருமருந்தாய் ஆகின்றது. சில நாழிகைப் பொழுதின் முன்னர் விழிமூடிச் செயலற்று உறங்கியிருந்த உலகம் இப்போது சுறுசுறுப்பின் களமாய் செயற்படத் தொடங்குகின்றது. கழிந்த நாளின் அனுபவங்களும் இனி வரும் நாட்களுக்கான எதிர்பார்ப்புக்களும் அன்றைய செயல்களை ஆற்றுப்படுத்தி வைக்கின்றன.

உதய சூரியக் கதிர்களிலும் சற்றே வெம்மை படரத் தொடங்குகின்றது. சூரியனைச் சுற்றியுள்ள மேகங்களும் ஒளிமிகுந்த வர்ணத்தில் ஜொலிக்கின்றன. தம்மைச் சார்ந்தோரைச் சிறப்பிக்கின்ற நற்பண்பாளர் போலத் தினகரன் தோன்றுகிறான். சுடர்கின்ற மேகங்களின் நடுவே அடர்ந்த பேரொளித் தட்டாக ஆதவன் காட்சியளிக்கின்றான்.

இமயத்தின் பெருமையைச் சிறுகல் செப்புமா? எல்லையில்லாக் காலைப் பொழுதழகு சொல்லினிலே சிக்குமா? வார்த்தைகளிலடங்காத வண்ணப் பொலிவுடன் சூரியச் செல்வனின் சுந்தரப் பவனி தொடர்கிறது. எங்கும் ஒளி மயம்! எல்லாம் ஒளிமயம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலையில் நிகழ்ந்த தமிழ்த்தின விழா

சென்ற வாரத்தின் இறுதிநாள். அது சொல்லமுடியாத மகிழ்வு நிறைந்த நாள். எங்கள் பாடசாலையில் தமிழுக்கு விழா எடுக்கத தீர்மானித்த திருநாள். அன்று புலர்ந்த பொழுது சங்கத் தமிழ்க் காலத்தை எங்கள் பாடசாலையில் பரிணமிக்கச் செய்திருந்தது. ஆம்! பாலர் முதல் உயர்நிலை வகுப்பினர் வரை பைந்மிழ் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வண்ணம் உடையணிந்திருந்தனர்.

மாணவர் யாவரும் வெண்ணிற வேட்டியும் சட்டையும் அணிந்தபடி விழா ஒழுங்குகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். சிறுமிகள் பட்டுப் பாவாடை சட்டையணிந்து பட்டாம்பூச்சிகளென மகிழ்ந்திருந்தனர். உயர் வகுப்பு மாணவிகள் பண்டைய எங்கள் குல மகளிர் போலச் சேலையணிந்து மாலை சூடியிருந்தனர். அன்புக்குரிய எங்கள் ஆசிரியர் குழாத்தினரும் அழகு தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலித்தபடி விழா ஒழுங்குகளை நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

பாடசாலை வாயில் அலங்கார வளைவுகளாலும் அழகிய மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இருபுறமும் இலங்கிய இரு பெரிய குத்துவிளக்குகள் மங்களம் பொங்கச் செய்துகொண்டிருந்தன. நிறைகுடமும் நெல் மணிகளும் விழாவின் புனிதத்தைப் பொலியச் செய்தன.

மாணவர்கள் ஒன்றுகூடும் அரங்கத்தின் கண்ணமைந்த அழகிய மேடை வெண்மலர் மாலைகளை விதானமாகக் கொண்டிருந்தது: ஒளி உமிழும் தீபங்கள் அரங்கத்தை எல்லைப்படுத்தி அழகு செய்தன. ஊதுபத்தியின் சுகந்தமான நறுமணம் உள்ளத்தில் அமைதியை நிறைத்தது. உள்ளாக அமைந்திருத்த கல்வித்தாயின் திருவுருவம் தீப ஒளியில் நனைந்து கொண்டிருந்த தோற்றமானது தேவலோகமோ எனும் நினைவைத் தோற்றுவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்காலைப் பொழுதுக்கு விடை கொடுத்தபடி வெயிலவனின் இளங்கதிர்கள் வெம்மை பெறத் தொடங்கியிருந்தன. நேரம் பத்து மணியைத் தாண்டிய வேளை. விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்கள் வரத் தொடங்கியிருந்தார்கள். அவ்வேளையில் விழாவினைச் சிறப்பிக்க அழைக்கப்பட்ட தலைமை விருந்தினர் வருகை தந்தார். 'தமிழின் தனயன்' எனப் போற்றப்படுகின்ற 'அறிவுடை நம்பி' எனும் நாமம் கொண்ட அவ்வறிஞர் பெருமானும் ஏனைய தமிழ்ப் பெரியோர்களும் வரவேற்கப் பட்டனர். அதிபரும், ஆசிரியர்களும் அவர்களை இன் முகத்துடன் வரவேற்றனர். மங்கல நீறும், மஞ்சள் சந்தனமும் வழங்கி உபசரித்தனர். அறிஞர் குழாம் அரங்கம் வந்தடைந்தபோது ஒருமுகமாய் எழுந்துநின்று அவர்களை வரவேற்றனர். தொடர்ந்து மாணவிகளின் இன்னிசைக் கீதம் அவர்கள் வரவுக்கு கட்டியம் இசைத்தது. கீதத்தின் நிறைவில், அறிவுடைநம்பி அவர்கள் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். திருவிளக்கு மங்கலமாக ஒளிர்ந்த வேளையில் அறிஞர் குழாம் அரங்கம் நோக்கி அழைத்துச்செல்லப்பட்டது.

தொடர்ந்து மாணவிகள் தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, பாடசாலைக் கீதம் என்பனவற்றை இசைத்தனர். அமைதியான அந்தப் புனிதப் பொழுதில் எழுந்த இனிய கீதங்கள் நெஞ்சங்களில் நிறைவைத் தோற்றுவித்தன: எண்ணங்களில் அமைதியான ஆனந்த உணர்வை அரும்பச் செய்தன

இசையின் நிறைவில், அதிபர் அழைக்கப்பட்டிருந்த பெரியோர்களை அன்புடன் வரவேற்று வாழ்த்துக் கூறினார். தமிழைத் தழைக்கச் செய்கின்ற தலைமை விருந்தினரை உரையாற்ற அழைத்தார். தமிழே உருவெடுத்தாற் போல உருவும் உளமும் பொலிந்த அறிவுடைநம்பி அவர்கள் ஒலிவாங்கியின் முன்னின்று உரையாற்றத் தொடங்கினார். தமிழுக்குத் தாள் பணிந்தார். தன்னை அழைத்தமைக்கு நன்றி நவின்றார். தமிழன்னை அருள் வேண்டி தன்னுரை தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராகப் பாய்கின்ற தெள்ளிய ஆற்றைப் போல தமிழ் பெருக்கெடுத்தது. தென்றலின் மென்மையும் செங்கதிரோன் சுடரும் சேர்ந்தது போல் எங்களின் நெஞ்சங்களைத் தொட்டது. எண்ணங்களில் ஒளியேற்றி வைத்தது. 'தமிழின் தொன்மையும் மேன்மையும்' என்றவாறு அவர் ஆற்றிய உரை பசுமரத்தாணி யன்ன எம்உள்ளங்களிற் பதிந்தது!

தொடர்ந்து 'சைவப் புலவர்' 'பரிமேலழகனார்' 'தமிழில் எழுத்தியலின் சிறப்பு' என்ற பொருள்பட பேச்சு நிகழ்த்தினார். தமிழின் சிறப்பான எழுத்துக்களையும் அவற்றின் பயன்பாட்டையும் பற்றிய அவர் உரை மாணவர்க்குப் பயன் மிகுந்ததாய் அமைந்தது. அதன் பின்னர் தலைமை விருந்தினர் தமிழ்த்தினப் போட்டிகளில் புலமை பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து உணர்வுகளுக்கு விருந்தளிக்கும் உன்னதக் கலைகள் அரங்கேறத் தொடங்கின. உயர்தர வகுப்பு மாணவர்கள் உருவாக்கி இசையமைத்த 'தமிழெங்கள் உயிருக்கு நேர்' எனும் தலைப்பிலமைந்த குழுப் பாடல்கள் உணர்வுகளைத் தட்டியெழுப்பின; தனிநடனங்கள், குழு நடனங்கள் என்பன கலை நயம் மிக்கனவாய் கண்களை நிறைத்தன.

'மீண்டும் பாரதி' என்ற தலைப்பில் மேடையேறிய நாட்டிய நாடகம் எல்லோரையும் கவர்வதாய் ஏற்றம் மிகுந்து விளங்கியது. கலை நிகழ்வுகளின் கடைசி அங்கமாய், நிகழ்வுகள் யாவுக்கும் மணிமகுடம் வைத்தாற்போல் சிலம்பு' நாடகம் அரங்கேறியது. கருப்பொருளின் சோகமும் வீரமும் கண்களை நனைத்தது. சொல்லிலடங்காத கண்ணகியின் பெருமை நெஞ்சத்தை நிறைத்தது. எல்லோரிடமும் பாராட்டைத் தட்டிச் சென்றது.

இறுதியாக தமிழ்மன்றத் தலைவரான எங்கள் தமிழாசிரியர் நன்றியுரை நவின்றார், விழாவைச் சிறப்பித்த அனைவருக்கும் தம் வாழ்த்துக்களைக் கூறினார். தமிழின் சிறப்புரைத்த அத்திருநாளின் நிகழ்வுகள் தேவாரத்துடன் நிறைவெய்தின. மறக்க முடியாத நினைவுகள் நெஞ்சை நிறைக்க மகிழ்வுடன் நாங்கள் இல்லம் மீண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்வாழ்வு நலம்பெற
# நல்லன செய்வோம்
# தீயன விலக்குவோம்

விலங்கொடு விலங்காய் வாழ்ந்த மனிதன் தனித்துவமாய் இலங்க சிந்தனையறிவும் அதனாலாய நல்லொழுக்கமுமே காரணமாயின. புதியன புகுதலும் பழையன கழிதலும் போல நல்லனவற்றை நம்மில் சேர்க்கும்போதே அல்லன நீங்கும் ஆற்றல் வேண்டும். சொல்லிலே மட்டுமல்ல செயலிலும் இவ்வுறுதி வேண்டும்.

நஞ்சு விதை விதைத்தாற் பஞ்சு மரம் முளைப்பதில்லை. முளைக்கீரை போட்டால் முருங்கைக்காய் காய்ப்பதில்லை. இது இன்று நேற்றல்ல, தொன்றுதொட்டு நிற்கும் உண்மை. ''வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்'' எனும் பழமொழி இதற்குச் சான்று பகர்கின்றது. வினைகள் இரு வகைப்படும். நல்வினை, தீவினை என்பன அவை. நல்வினைகள் புரிவோரை நல்லோர் என நாடு போற்றுகிறது. மகாகவி பாரதியார் ''உள்ளத்தில் உண்மை ஒளிஉண்டாயின் வாக்கினிலே ஒளிஉண்டாகும்'' என்கிறார்; உண்மைதான். நல்ல சொல், நல்ல செயல், நன்னடத்தைகள் என்பன தனி மனிதனை வளம்படுத்த வல்லன.

ஈரடியால் இந்த வையத்தை அளந்த திருக்குறள் சொல்வதை நோக்குவோம்

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

தீ என்பது தீய்த்தலால் வந்த காரணப் பெயராகும். தீய செயல்களும் தீயைப் போலவே தீய்க்கும் ஆற்றலுடையன. சேர்ந்தன யாவையும் அழிக்கும் இயல்பின. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கொடுந்தீக்கு ஒப்பிடுகிறது குறளே வியம். அஞ்சுதற்குரிய பொருளாக தீயனவற்றை எடுத்துக்காட்டு கின்றது. அற நூலின் அறிவுரையை ஏற்று நாமும் தீயன விலக்குதல் நன்று.

இனி. நல்லார்க்கு நல்லார் நல்லார் தீயார்க்குத் தீயார் என்று லகரங்கள் பலஆடும் தமிழ்ச் சொற்சிலம் பத்தைப் பாருங்கள். நல்லெண்ணம், நன்னடத்தை உடை யோர் நல்லார். இத்தகைய நல்லவர்களும், நல்லவர் பல ரும் இனிமையாகப் பழகுவார்கள். தீயவழக்குமுடைய தீய வர்கள் நல்லவர்களுடன் இனிமையாகப் பழகமாட்டார் கள். நம்மிடம் நற்பண்பொளி பிரகாசிக்கும் போது தீய பண்புகளுக்கு நம்மிடம் வேலைதான் ஏது? ஆகவே அடிப் படை நற்பண்புகளை வளர்த்து, துர்க்குணங்களைத் துரத்தி அறக் கொள்கைகள் தழைக்கச் செய்வோம்.

''உன்னைத் திருத்திக்கொள்; உலகம் தானாகவே திருந்திவிடும்'' என்பது அறிஞர் கூற்று: நாம் ஒவ்வொரு வரும் ஆண்டவனுக்கு ஒப்புக்கொடுத்து வாழவேண்டும். தவறுதல் மனித இயல்பு. தவறிலிருந்து திருந்தி வாழ்வைச் செழிக்கச் செய்யவேண்டும். நல்ல பண்புகளால் நம்முள் நாம் ஏற்றும் நல்லொளி, நாளை உலகெலாம் பரவி நம்புகழ் பரப்பும்.

பொன்னும் மணியும் பொலியும் செல்வமும் பின்னும் பிறவும் மனநிம்மதியைத் தந்துவிடுவதில்லை; அடுக்குமாடி கள் ஆத்ம திருப்தியைத் தந்துவிடுவதில்லை. பெருந்தனக் காரர் பலர் கனத்த மனதுடன் அமைதியின்றித் தவிக் கிறார்கள்: தீயவழிகளில் சேர்த்த பணத்துடன் நாளும் நிம்மதியின்றி வாடுகிறார்கள். புறத்தில் பெருமையாகக் காட்சியளித்தாலும் அகத்தினால் சிறுமையுற்று அவலப்படு கிறார்கள். பணமிகுந்தோர் அநாதை விடுதிகளை ஆத ரித்தல், அறக்கோட்டங்கள் அமைத்தல். அன்னதானங் கள் செய்தல் என்பவற்றைச் செய்யத் தகுந்தவர்கள் அவ் வாறு செய்து மனநிறைவுடன் வாழ்தலே நன்று.

அறம், அன்பு, பண்பு, கருணை இனிய சொற்களைப் பேசுதல். விருந்தோம்புதல். மூத்தோரைக் கனம் பண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், நல்லொழுக்கமுடைமை என்பன சில நன்மைதரும் வழிகளாகும். பொதுவாக நற்பண்புகளைப் பழகுதல் ஒப்பீட்டு ரீதியில் கடினமானது, தீயவை சேரச் சில நிமிஷங்களே போதும் உலகில் தாவர ,விலங்கு வகைகளிலும் கூடத் தீயன சடுதியில் தழைப்பதையும் நல்லன பெரும் முயற்சிகளின் மூலமே தோன்றுவதையும் அவதானிக்கலாம் ஆனாலும் நற்பழக்கங்களே இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயப்பன. ஆகவே இவற்றைப் பேணி வளர்க்க வேண்டும்.

ஒரு சமூகம் செழிப்புற நல்லன போற்றப்பட வேண்டும். தீயன அகற்றப்பட வேண்டும். இதற்காகவே நீதி வழங்கும் நடைமுறைகளும் அதற்கான சட்ட விதிகளும் உருவாக்கப்பட்டன. நீதி வழங்கல் முறைகளில் தீயன தடுப்பதற்கான தண்டனைக் கொள்கைகளில் பயமுறுத்தல் முறைகள் நீக்கப்பட்டு சீர்திருத்த முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் தாமாகவே உணர்ந்து நல்லன செய்யவேண்டும் என்பது இதன் அடிப்படை நோக்கமாகும்

வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வங்களாகப் போற்றப்படுகிறார்கள், இறப்பின் பின்னும் அழியாப் புகழுடைத்த இவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாமும் பிரதியெடுத்தல் வேண்டும். சிலர் செயலற்று சோம்பித் திரிந்து, அதனால் தாழ்வுற்று பின் தீச்செயல்களைப் புரிகிறார்கள்: சிறுவயது முதற்கொண்டே உற்சாகமாக இருந்து நம்வாழ்வு முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும்.

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும் என்பார்கள். நன்மைகள் பலவற்றைத் தீச்செயல் ஒன்றே முற்றாக அழித்துவிடும்: பாசிபட்ட வெண்துணி போல மாசுபட்ட மனத்திற்கு என்றுமே நிம்மதியில்லை. நல்லன மட்டும் செய்தாற் போதாது. அல்லன நீக்கவும் அறிந்திருக்க வேண்டும். ஆகவே, நாமும் நல்லன செய்வோம், அல்லன நீக்குவோம் நல்லொளி விளங்க, பெற்றோர் புகழ் பரப்பி, மற்றோர் வாழ்த்துக்களைப் பெற்று வளம்பெற வாழ்வோம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் திருவள்ளுவரைச் சந்தித்தால்...

பேரன்புக்கும் பெருமைக்குமுரிய தமிழ் வல்ல பெரியோர்களே! அருந்தமிழின் நறுஞ்சுவையைப் பருகும் ஆவலுடன் அவையில் வீற்றிருக்கும் அன்பர்களே! "குறளுரைத்த வள்ளுவர்பிரானை யான் சந்தித்தால்..." எனும் பொருளில் சொற்பொழிவாற்ற உங்கள் முன் வந்துள்ளேன்.

அணு முதல் அண்டம் வரை அனைத்தையும் உரைத்த வியாபித்த அறிவுடைய வள்ளுவர்பிரானை யான் சந்தித்தால்... கற்பனையே என்மனதில் கனவுகளைத் தோற்றுவிக்கின்றது. அந்த அறிவின் சொரூபத்தை நேரில் நான் சந்தித்தால்... நான் முதலில் கேட்பது இதுதான்!

"கையகல வாணாளில் எப்படி கடலளவு நூல் படைத்திர்...?" மெய்யே இது உங்கள் அனுபவம் உரைக்கும் நூலா; அன்றிக் கேள்விச் செல்வத்தைக் கேடில் நூலாகச் செய்தீரா ?" எனக் கேட்பேன். ' எவ்வாறெனினும், ஈரேழுலகம் அளக்கின்ற ஒரு கருத்தை எவ்வாறு ஈரடியில் சொல்லி வைத்தீர்" என்று வினவுவேன்.

"உலகின் பொருளனைத்தும் மூன்றாகப் பகுத்து ஒவ்வொரு பகுதிக்கும் ஓர் அதிகாரம் வகுத்து, பெரும் பொருள் ஆகிய பரம் பொருள் ஆயினும் பயன் குறைந்த சிறு பொருள் ஆயினும் பத்தே குறளில் பரிந்துரைத்த பாங்கினை வியந்துரைப்பேன். மனிதனுணரா மகாசக்தி ஏதும் உம் மனத்திருந்து உதவி செய்ததா? அன்றி நீரே பாடியவாறு,

> "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்க முடையா னுழை"

என்பதன்படி ஊக்கமுடைய உம்மிடத்தே ஆக்கம் வழி கேட்டு வந்து சேர்ந்ததோ? என்று வினவுவேன். உம் குறளில் அடியனாய் நின்று ஆண்டவனைத் தொழுதீர்; அர

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாளும் மன்னனாய் நின்று அகிலமாளும் திறம் சொன்னீர்; அன்புடைப் பெண்ணாய் நின்று பிரிவில் துயருற்றீர்; எப்படி ஒரு சமயத்தில் எல்லாமாய் நின்று எழுதுகின்ற வல்லமை பெற்றீர்' என்று புகழ்ந்துரைப்பேன்.

தன் குறள் தரணியை வழிநடத்துகின்றதா? என்றவர் கேட்பின் வாய் மூடி நின்று என் ஆற்றாமையை வெளிப் படுத்துவேன். பின் சொல்வேன்; 'பலர் அறம் மறந்து தம் நலம் பெரிதென்று போற்றுகின்றார்கள்; அன்பிழந்து துணைவியை அடித்து விரட்டுகின்றார்கள்; குடியிறந்து போனாலும் வரி கேட்டு வாசலில் நிற்கின்றார்கள் ஆட்சி யாளர்கள். ஆயினும் விழா மேடைகளில் தங்கள் சிலை வடித்துத் திரைநீக்கம் செய்கின்றார்கள்.

தம்முடைய புன்மை நிலையை மறைப்பதற்காய், தம்மை நல்லவரென்று பிறர் கணிப்பதற்காய் உங்களுக்கு விழா எடுக்கின்றார்கள். விழா மேடையில் நின்று நீங்கள் வெறுத்த புறங்கூறலைச் செய்கின்றார்கள்' என்று சொல் வேன்.

மேலும், 'நீங்கள் சொன்ன தீவினையச்சத்தை மறந்து தீயவழிச செல்கின்றார்கள். தவம் மறந்து தம் வாணாளை அவம் செய்கின்றார்கள். கூடா நட்புடன் கூடுகின்றார்கள். கள்ளுண்டு, வாய்மை கெட்டு பிறனில் விழைகின்றார்கள். இனியவை வெறுத்து இன்னாதன பல செய்கின்றார்கள்.

தாங்கள் கூறியபடி துறவு பூண்டிருக்கின்றார்கள்; இல் லறத்தில் இருந்து அல்ல. நல்லறம் புரிவதிலிருந்தே துறவு கொண்டிருக்கின்றார்கள்' என்று நான் பதில் சொல்வேன்.

அவ்வாறெனின், ''நான் சொன்ன குறள் பயனற்றுப் போனதா? பாலையில் பெய்த நிலவாகி, வீணாகி விட் டதா?'' என்று அவர் துன்பம் கொள்ளுவாராயின், பின் கண்டவாறு பதில் சொல்வேன் நான்.

வள்ளுவன் வழி நின்று வாழ்வாங்கு வாழ்ந்த பெருமனி தர் கதை சொல்வேன். வாய்மை தவறாது, அறம் பிறழாது வாழ்க்கைக்கு வரைவிலக்கணம் வகுத்தவர்கள் திறம் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேன். தாமும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழி சொன்ன நன் மக்கள் பாதைக்கு எல்லையாக நின்ற திருக்குறளின் புகழ் உரைப்பேன்.

கீழைத்தேயம் என்று கீழாக மதிக்கப்பட்ட எங்கள் தேசங்களில் பெருநிதியமாகப் புகழ் பூத்து நிற்கின்ற அவர் நூலின் பெருமை சொல்வேன். வறியவன் கைக்கிடைத்த வைரம் போன்று பலர் வாழ்வில் ஒளிபெருக்கும் சுடராக இருக்கின்றது தங்கள் நூலென்று வாயாரப் புகழ்வேன்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப் பாரதத்தின் புகழுரைக்கின் றான் பாவலன் பாரதி அவன் சொன்னவாறே உங்கள் நூல் உலகப் பொதுநீதியாய், ஒருநாளும் பொய்யாத மொழியாய் நின்று நிலவுகின்றது. பொது மொழியாம் ஆங்கிலத்திலும் பெயர்க்கப்பட்டு உலகனைத்துக்கும் உறு துணையாய் வழிகாட்டுகின்றது' என்றுரைப்பேன்.

''ஆயிரம் காலமாய் அரியதொரு வழிகாட்டியாய் விளங்குகின்ற தங்கள் நூலும், நூல் செய்த நும் புகழும் நிலையானதே. ஆயினும் மீண்டும் உமக்கொரு பிறப்புண் டேல் எம்மிடை மலர்ந்து, உம் நூல் வழி நடந்து எமக் கொரு வழிகாட்டியாய் எம் வாழ்வில் ஒளிதருவீர்'' என்று வேண்டி வணங்குவேன். அவர் பாதமலர் தொட்டு என் பணிவு சொல்லி வணங்கி விடைபெறுவேன்.

கற்பனை உலகில் சிறிது நேரம் என்னோடு கைகோர்த் துப் பறந்தீர்கள்; அனைவருக்கும் என் நன்றி! வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் பெருமை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்! குமரி முதலாக இமயம் வரையாக முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ்! தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றைத் தன்னாபரணமாகப் பூண்ட தண்டமிழ்! ஆம்! செந்தமிழ்ப் பெருமை சொற்களுள் அடங்காது. எனினும் இமயத்தின் பெருமையைச் சிறுகல் செப்புவது போல, சில கருத்துக்களைச் சொல்ல நினைக்கின்றேன்.

ஆதி மனிதன் மொழி புரியாது, வழி தெரியாது தவித்தான் நாள்கள் நகரப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தொடங்கினான். சமிக்ஞைகள் வளர்ந்து சொற்களாயின. பல்வேறு மொழிகள் பிறந்தன. மொழிக்கேற்ப நாகரிகங்கள் உருவாகின. நாகரிக மேம்பாட்டின் அடிப்படை ''மொழிப் பயன்பாடு' என்பது அனைவரும் அறிந்ததே. திராவிடக் கூட்டத்தின் தனித்துவ முன்னேற்றத்திற்குக் காலாகத் தமிழ் மொழியே விளங்கியது

வடமொழியும், ஆங்கிலமும், சிங்களமும், பிரெஞ்சும், இலத்தீனுமாகப் பல மொழிகள் தற்போது பாவனையிலுள்ளன. முந்தைய காலத்து மொழிகள் பல இப்போது பேச்சு வழக்கில் மட்டுமேயுள்ளன. சில எழுத்து வழக்கில் மட்டும் உள்ளன. வேறு சிலதோ காலச் சுழற்சியில் கரைந்து, பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இல்லாது ஒழிந்துபோய் விட்டன. சில மொழிகள் மிகச் சொற்ப எண்ணிக்கையினராலே தான் பேசப்படுகின்றன. ஆனால் தொன்மைத் தமிழ் மொழியோ இன்று வரை எழுத்து, பேச்சு ஆகிய இரு வடிவத்திலுமுள்ளது. கூடவே மிகப்பரவலாக உலகெங்கும் பேசப்படும் மொழியாகவும் திகழ்கின்றது.

தமிழ் மொழியானது 247 தனி எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றில் தமிழுக்குச் சூட்டிய அழகுக் கிரீடமாக ''ழ'' கரம் விளங்குகிறது. மலையாளம் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் இது காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் ''ழ'' ''ள'' ''ல'' வேறுபாடுகள் இசையொலியில் இனிமை பரப்புவன. தமிழின் இனிமையும் மென்மையும் தன்னிகரற்றன. மொழிச் சிறப்பின் தாக்கத்தை அந்தந்த மொழிகளின் ,இசைக்கோலங்களில் காணலாம். மேலைத்தேய இசைகளில் இல்லாத ஓர் அமைதியான, அற்புதமான நிறைவை தமிழ்ப்பாடல்களைக் கேட்கின்றபோது உணரலாம். இதனால்தான் ''தமிழுக்கும் அமிழ்தென்று பேர், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

ஆதியிலே பிறந்த மொழிகளாய் ஆரியமும் தமிழும் கருதப்படுகின்றன. இவற்றிலிருந்து பல மொழிகள் பிறந்து வளர்ந்தன தாய்மைச் சிறப்புத் துலங்கும் இவை தொன்மையும் செம்மையும் உடையன. இதில் வடமொழித் தாயின் குழந்தைகள் மட்டுமே உயிரோடு இருக்க, தென்மொழித் தாயான தமிழோ தன் குழந்தைகளுடன் மங்காப் புகழ் பெற்று, குன்றாத இளமையுடன் திகழ்கின்றது. கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழின் பிள்ளைகளாகத் தோன்றின. பல மொழிகள் நாட்டு வழக்கற்றும் ஏட்டு வழக்கற்றும் போக நற்றமிழ் மட்டும் நானிலம் போற்ற நளினமாய் நடைபயில்கிறது. இன்னும் தமிழ் ஒரு திரிசொல்லாய் பல்வேறு மொழிகளுள் புகுந்து பரவியுள்ளது.

''யாமறிந்த மொழிகளுள்ளே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார் மகாகவி பாரதியார். ஓசைக்கும், ஒலிக்கும் இடையே நுணுக்கமான வேறுபாடு தமிழில் உண்டு. தமிழுக்கு மட்டுமே உரியதாய் சிறப்பொலிகளும் சிறப்பெழுத்துக்களும் கூடக் காணப்படுகின்றன. இதனால்தான் சந்தம் மிகுந்த பல ஒலியோவியங்கள் செந்தமிழில் காணப்படுகின்றன. கம்பராமாயணக் காட்சிகள் இதற்கு நல்ல சான்றுகளாகும். திருப்புகழ் தெய்வத் தமிழினைச் சிறப்பிக்கும் சொல்லோவியமாகத் திகழ்கிறது. உதாரணமாக ''முத்தைத் தரு பத்தித் திருநகை' என்ற பாடலின் தமிழொலிச் சந்தம் கேட்டால் மட்டுமே உணரத் தக்க அழகுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப் பொலிவில் கூட ஏற்றம் மிக்கது தமிழ் என்று புகழப்படுகின்றது. 'சில மொழிகள் சற்றே மிகையாய் நாண, ஆங்கிலம் நாணமற்ற நங்கையர் போலிருக்கத் தமிழ்தானே அளவோடு நாணும் நளினப் பெண்ணாய்த் தோற்றமளிக்கிறது' என்பது ஒரு கவிஞனின் கூற்றாகும்.

தமிழ் தந்த காப்பியங்கள் எண்ணுக் கணக்கற்றவை. பொய்யாமொழிப் புலவர் செய்த திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பாவனையிலுள்ளன ஐம்பெரும் காப்பியங்களும் தமிழை இன்னும் அழகு படுத்துகின்றன. பழகு தமிழில் பாரதியார் இயற்றிய கவிதைகளும் புகழ் பெற்றவையே. இலகு தமிழில் இன்றிக் கடினத்தமிழ் நூல்களான தொல்காப்பியம், நிகண்டு என்பனவும் பெரிதும் பொருள் பொதிந்த பொக்கிஷங்களாகும். இரண்டே அடிகளில் இவ்வகிலம் அளந்த குறளின் தகைமை கருதினால், உலகமே தமிழுக்குள் அடங்கிப் போனது எனினும் மிகையல்ல. இச்சிறப்பு வேறெந்த மொழியில் உண்டு?

ஆனால் இத்துணை சிறந்த எம் தமிழ் இன்று வெறும் நாகரிக மோகத்தால் கொச்சைத் தமிழாய்த் தலைகுனிந்து நிற்கும் சந்தர்ப்பமும் உண்டு. பிற மொழி மோகம் பலரையும் ஆட்டிப் படைக்கிறது. தமிழ்ப் பாடல்கள் என்ற போர்வையுள் மேலைத்தேச இசைக்கோலங்கள் பல மறைந்து கிடக்கின்றன. சங்கத்தமிழ்ப் புகழ் மங்கிச்செல்லும் அபாயம் நெருங்குகிறது. மொழிக் கலப்பால் தமிழின் தனித்துவ அழகு சிதைகிறது: இனிமை கெடுகிறது.

இவ்வேளையில், தமிழ் வளர்த்த பெரியோரின் வரலாறுகள் மீட்டுப் பார்க்கப்படவேண்டும். ''முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்'' வாழ்கின்ற இறைவன் போல, எம்மொழி தன்னிலை மாறாது வாழ மாணவ சமுதாயம் பாடுபட வேண்டும். தெளிவாகத் தனி அழகு சிதையாதபடி பல்மொழியறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்.

> ''எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
> என்றென்றும் வாழியவே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம்

நீளமாய்ப் பரந்து நிலமும் வெளியும் நீலக்கடலும் மலையும் மஞ்சுமாய் வியாபித்திருக்கிறது அகிலம். ஆயினும் ஆற்றல் மிக்க மனித குலத்தினிடத்தே அது கைக்குள் அடங்கியதாய், மனிதனின் காலடியில் காத்திருக்கிறது. அவ்வாறெனின் இந்நிகழ்வு புவியியலில் விளைக்கப்பட்ட சடத்துவ மாற்றத்தினால் நிகழ்ந்ததா?

இல்லை! அறிவியலில் ஏற்பட்ட அசுர வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு; கால்நொடிப் பொழுதில் கணக்கில்லாத் தூரம் கடந்து தொடர்பு கொள்ளும் வல்லமை விளைத்த அற்புதம் இஃது!

இரு மனிதர்களிடையே கருத்துக்களைப் பரிமாறுவதற்காகப் பரிணமித்த தொடர்பு கொள்ளலானது இன்று எல்லையற்று வியாபித்து நிற்கின்றது. ஆயினும் இத்தொடர்பாடலின் அத்திவாரமாக, அடிநாதமாக மொழியே விளங்குகின்றது.

நம் மூதாதையரின் பரிணாமத்தோடு நூற்றுக்கணக்கான உலகியல் மொழிகள் தோற்றம் பெற்றன. ஆயினும் அவற்றில் சில வழக்கிழந்தன. சில பேச்சுமொழியாக மட்டும் வழங்கி வந்தன; சில மூலம் பிறழ்ந்து திரிந்து வளர்ந்தன. சில மொழிகள் மட்டும் எழுத்திலும் பேச்சிலும் இலக்கண வரையறைக்குட்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வாறான என்றும் வாழ்கின்ற மொழிகளில் மணிமுடி சூடி, மனித குலத்தின் பொது மொழியாக விளங்குவது ஆங்கில மொழியேயாகும்.

ஆங்கில மொழியானது இன்றைய உலகில் அதிமுக்கியமான தொடர்பாடல் வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 'தொடர்பாடல்' எனும் பதமானது தன்னகத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய பொருளையும் பல்வேறுவிதமான செயற்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. இச்செயற்பாடுகள் யாவற்றுக்கும் கைகொடுக்கின்ற ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தைச் சற்றே ஆராய்வோம்.

பூமியானது மனிதரால் எல்லையிடப்பட்டு 'நாடு'' எனும் அலகாக வகுக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு, சிலவேளைகளில் ஒரு நாட்டின் இருவேறு பிரதேசங்களில் கூட வாழும் மக்கள் பல்வேறு இயல்புகளால் வேறுபடுத்தப்படுகின்றனர். இவ்வேறுபாட்டில் பிரதானமானது பயன்படுத்தப்படும் மொழியில் காணப்படும் பாகுபாடாகும். தன்னை உணரச் செய்து தானும் மற்றோரை உணர்கின்ற திறனையும் வழங்குவது மொழியேயாகும். வேறு தனிமையாக்கப்படும் தன்மையை நீக்கி, வெவ்வேறு மொழியாளரை இணைக்கின்ற பாலமாய் ஆங்கில மொழி உதவுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காகத் தேசங்கள் ஒன்றிலொன்று தங்கியுள்ளன எல்லைப்படுத்தப்பட்ட வளங்களும் வெவ்வேறுபட்ட அறிவியல் ஆற்றலும் தங்கி வாழ்தலைத் தீர்மானிக்கின்றன. ஆதலால் தேசங்களிடையே ஏற்படும் உறவுகளை வளர்க்கின்ற உற்றதுணையாக ஆங்கிலம் விளங்குகின்றது.

ஆதி நாள்களில், நம்முன்னோர் முயன்று பெற்ற அறிவுப் பொக்கிஷங்கள் மொழியென்னும் சிறையுள் இட்டுப் பூட்டப்பட்டிருந்தன. அந்த அறிவுச் செல்வத்தைப் பயன்படுத்தும் ஆற்றலை. அம் மொழியாகிய திறப்பை உடையவர்கள் மட்டுமே பெற்றிருந்தனர்.

உதாரணமாக, ஐரோப்பாவின் அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த பல்துறைசார் அறிவியல் விற்பன்னர்கள் தங்களது அரிய கண்டுபிடிப்புகளை தங்களது தாய் மொழியில் வரையறுத்ததைக் கூறலாம்.

இவ்விடரினை நீக்கி, எல்லோரும் அறிவினைப் பெறுவதற்கு ஆங்கில மொழி உதவியது. உதவுகின்றது. உதவும் அறிவியலின் படைப்புகளான ஆற்றல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழிமூலமே மக்களிடையே பரவுகின்றன. ஏனெனில் உலகின் மூலை முடுக்கெங்கும் ஊடுருவி, வேர்பிடித்து, உலவிவருவது ஆங்கில மொழியேயாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சகல மட்டத்தினருக்கும் ஆற்றலை வளர்க்க, அறிவை உயர்த்த ஆங்கில மொழி உதவுகின்றது.

ஒரு பிரிவுமில்லாப் பூமியானது பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றினால் மேலைத்தேயம், கீழைத்தேய எனப் பாகுபடுத்தப்படுகின்றது பொய்யானயாவையும் நீக்கி மெய்யான ஒன்றைப் பற்றுதலே வாழ்வு என்கின்றது கீழைத்தேயம் ஆற்றலின் ஊற்றுக்கண்ணாய் அறிவை நம்பி வாழ்கின்றது மேலைத்தேயம். இவ்விரு துருவங்களாக வேறுபட்டு நிற்கின்ற இரு பிரதேசங்களும் தங்கள் கொள்கைகளைப் பரிமாறிக் கொள்ளும்போதெல்லாம் ஆங்கிலமே அங்கு கைகுலுக்கிக் கொள்கின்றது.

இதற்குச் சான்றாக திருக்குறளும் கீதாஞ்சலியும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதைக் கூறலாம். அறிவியல் நூல்கள் ஆங்கிலத்திலிருந்து பிறமொழிக்கு பெயர்க்கப்பட்டதைக் கூறலாம். இவ்வாறாக ஆங்கிலம் அன்பை வளர்க்கின்றது. அறிவைப் பெருக்குகின்றது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பண்பை வளர்க்கின்றது (பண்பாடுகளைப் பலரும் அறியச் செய்கின்றது.) மேதை மொழியெனப் பலராலும் போற்றப்படுகின்ற ஆங்கிலம் அளிக்கின்ற சேவைகள் மிகப்பல.

இவ்வாறு பல அருமை பெருமைகளையுடைய ஆங்கில மொழியைப் பயில்வதற்கு சர்வதேசமும் விழைகின்றது. இதன்படியே எங்கள் நாடும் ஆங்கில மொழிக்குப் பாடவிதானம் ஆக்கியுள்ளது. 'ஐந்தில் வளையும்' என்பது ஆன்றோர் சிந்தனை. அதனாற்றான் இளவயது முதலே ஆங்கிலத்தைப் புகட்டுவதும் பெறுவதும் அனைவர்க்கும் இயன்ற செயலாகின்றது.

குறித்த தேசத்துக்கு மட்டுமுரிய மொழியானது கிணற்றுநீரை ஒத்தது. அதாவது தேவையை நிறைப்பது ஆயினும் அதன் உள்ளடக்கம் குறுகியதேயாகும். ஆனால் ஆங்கில மொழியோ பொங்கிப் பாய்கின்ற நதியொன்றின் உத்வேகத்துடன் நானிலத்தை அளந்து வருகின்றது. நன்மை பல விளைக்கின்றது. ஆதலால் ஆங்கிலக்கல்வியின் அளப்பரிய நன்மை உணர்ந்து அதனைப் போற்றிக் கற்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனாதைச் சிறுவனின் சுயசரிதை

அன்னமில்லா வயிறும் கன்னமிரு கோடாகக் கண்ணீர் ஆறும் அடையாளம் காட்டுகின்ற அநாதைச் சிறுவன் நான். வானமே என் கூரை; பூமியே என் வீடு; புது மகிழ்வும் பெருநிதியும் பெருகிவரும் சொந்தங்களும் பாவியென் வாழ்வில் பரிணமிக்காத வசந்தங்கள். ஆம்! கந்தலுடையும் நொந்த மனமும் சொந்தமாகக் காலம் முழுதும் காரிருள் சூழ்ந்த பாழ்வெளியில் வாழ்நாளை ஓட்டும் பாவி நான்.

இலையுதிர்கால இருள்வேளையொன்றில் தெருவோரக் குப்பைத்தொட்டி என்னைப் பூமியின் சுமையாகப் பரிசளித்தது பாதையோர வழிப்போக்கர் யாரோ என்னில் பரிதாபம் கொண்டு பக்கத்திலுள்ள அநாதைச் சிறுவர் இல்லத்தில் என்னை விட்டுச் சென்றனர். பனிப்பொழுது குளிரால் கொடுமைப்படுத்தியது. மழைப்பொழுது நோயால் வருந்தச் செய்தது. பாலகனான நான் அன்பான அரவணைப்பின்றி அடைந்த துயரங்க ” இன்றும்கூட என் நினைவுகளில் சுமையேற்றுகின்றன.

என்னையொதத அநாதைச் சிறுவர் பலர் அவ்வில்லத்தில் இருந்தார்கள். ஆயினும் கண்ணீர்க் காயத்தை துன்பம் விசாரிக்க முடியுமா? ஒவ்வொருவரும் தம் துன்பமே தாளவொண்ணாதது என்று எண்ணியிருந்தோம். அத்துடன் பற்றும் நட்பும் பரந்த மனப்பாங்கும் அர்த்தம் புரியப்படாத சிறு வயதுதானே! ஆதலால் சின்ன விடயங்களும் எங்களிடையே சச்சரவுகளைத் தோற்றுவித்தன. சந்தோஷங்களையும் சீர்குலைத்தன.

காலை, மதியம், இரவு என காலம் யாவும் வயிற்றுப் பசி தீர்த்தலே, எம் வாழ்வின் குறிக்கோளானது, ‘கல்வி’ எனும் சொல்லே எங்கள் காதுக்கும் எட்டவில்லை. கல்வி தாழ்வை நீக்கும்; வாழ்வை உயர்த்தும் என்று எங்களுக்கு யாருமே சொல்லியிருக்கவில்லை. அத்துடன் முண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடித்து, முன்வரிசையில் நின்று அரைவயிறு நிரப்பும் எங்கள் நிலையில் எங்களுக்கு வேறு எதுவுமே தேவைப்படவில்லை.

ஆனால் விதிக்குத் தன் விளையாட்டுப் போதாததாக இருந்திருக்க வேண்டும்! ஆம் விதியின் சதி என் கண்ணில் வற்றாத கண்ணீர் நதியை நிரந்தரமாக்கிவிட்டது.

இருளகலாத ஒரு பனிப்பொழுதில் எங்கள் இல்லத்துக்குத் தேவையான குடிநீரை எடுப்பதற்காக தெருவைத் தாண்ட முயன்றேன். அவ்வேளையின் ஒருகணம், என் வாழ்வில் அழிக்க முடியாத துன்பத்தை ஏற்படுத்திவிட்டது. விரைந்து வந்த இராட்சத வண்டியொன்று கண்ணிமைப் பொழுதில் என்னை மண்ணில் விழுத்தியது. என் இடக் காலைத் தன்னோடு எடுத்துச் சென்றுவிட்டது. 'இறந்துவிடுவேன்' என எதிர்பார்க்கப்பட்ட நான் துரதிஷ்டவசமாக உயிர் பிழைத்துக் கொண்டேன் 'அநாதை யோடு 'நொண்டி' எனும் அடைமொழியும் சூட்டப்பட்டு இல்லம் மீண்டேன்.

கொடிய அந்தகாரம் சூழ்ந்த என்னுடைய அந்த நாட்கள் ...... நாளொரு துன்பமும் பொழுதொரு கண்ணீருமாய்ப் போன அப்பொழுதுகள் ...... அவை சின்னஞ்சிறிய என் இதயத்தைச் சின்னாபின்னமாக்கி எந்த நாளும் கண்ணீரைப் பெருக்கின

என் கடமைகளையே என்னால் செய்யவியலாத சிறு பராயத்தில் மற்றச் சிறுவர்களின் துன்புறுத்தலுக்கும் ஆளானேன். துண்டிக்கப்பட்ட என் காலுக்கு அவர்கள் செய்த துன்பம் தாழாமல் அழுதேன். என் ஊன்று கோலைப் பற்றி இழுக்கும்போது முள்ளிலும் கல்லிலுமாய் விழுந்தேன். ஆயினும் இளவயதின் கொடிய துன்பங்கள் தானே அவர்களையும் இரக்கமற்றவர்களாக்கியது என்றெண்ணித் தெளிந்தேன். துன்பங்கள் யாவையும் வாய்மூடிச் சகித்திருந்தேன்

இந்த நிலையும் போதாதென்று விதி எண்ணியது போலும்! வானம் பொழிந்து வெள்ளமாயோடும் ஒரு மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் நாங்கள் வாழிடமும் ஆதரவும் இழந்தோம். யாரு மற்று நடுத்தெருவில் விடப்பட்டோம். ஆம்! வயதான எங்கள் இல்லத்து நிர்வாகி இறைபதம் எய்திவிட்டார் தனியார் நடாத்திய நிறுவனம் என்பதனால் எம்மைப் பராமரிக்க யாருமே தயாராயில்லை. தகிக்கும் வயிற்றுக்கு ஒரு கவளம் அன்னமிட எவரும் முன்வரவில்லை.

செய்வதறியாத அச்சமும், தாங்கமுடியாத பசியும் கண்ணீரை பரிசாய்த் தந்தன. இறுதியில் கையேந்தி வைத் தன. அன்று முதல் குறுகிய மனமுள்ள மாந்தர் முன் கூனிக் குறுகி நின்று சிறு பொருள் பெற்றேன்.

ஆரம்பத்தில் இரத்தலை எண்ணி வெறுத்தேன். அவ மானம் என்று குறுகி நின்றேன். ஆயினும் அநாதை, நொண்டியான இந்தப் பிச்சைக்காரச் சிறுவனை ஆதரிப் போர் எவருமில்லை என்பதை உணர்ந்தேன். 'உழைக்க வேண்டும்' என்ற என் உணர்வுக்கு மதிப்பளித்து வேலை கொடுக்க எவரும் விரும்பவில்லை.

ஊனத்தைப் பார்த்து ஒதுக்கி வைத்த உலகமே என்னை மீண்டும் இரக்க வைத்தது. தெருநீள நடந்து விரும்பாது தரும் பொருளைப் பெற்று பசியாறச் செய்தது. பிச்சையெடுக்கும் சிறுவனொருவனைப் பிறக்கச் செய்தது. கால நகர்வினில் பல்வகை மாந்தரும், பரந்த இந்த உலகமும் பழக்கப்பட்டு விட்டன. மெல்லிய உணர்வுகள் இழக்கப் பட்டுவிட்டன. மரத்துப்போன மனத்துடன் என் மனம் விரும்பாத வாழ்வு நீள்கின்றது.

இளவயதின் இனிய கனவுகள் நான் அறியாதவை. பாசமாய் அரவணைக்கும் நேச உள்ளங்கள் நான் பார்க் காதவை. துன்பம் அறியாமல் துள்ளி விளையாடும் காலம் என் வாழ்வில் எள்ளளவும் இருக்கவில்லை. வாழ்வின் சுமைகளை தோளில் ஏற்றி தடுமாறி வழிநடக்கும் ஏழை நான். பெற்றவரால் வெறுக்கப்பட்டு வெறுமையான மனத் துடன் வீதிகளில் அலையும் என் துன்பத்தை உரைப்பதற்கு வார்த்தையில்லை. ஆயினும் என்றாவது என் துன்பம் தீரும் என்ற நம்பிக்கைக் கீற்றொன்றில் உயிர் பற்றி என் வாழ்க்கை தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் சமயவிழாக் கொண்டாடுவதன் அவசியம்

மனிதன் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவனாக இருக்கின்றான். எம்மில் சிலர் தீவிரமாக ஒரே தெய்வத்தை நம்புகின்றார்கள். வேறு சிலர் 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கை உடையவர்கள். மிகச் சிலர் நாத்திகர்களாயும் உள்ளனர். எது எவ்வாறாயினும் சமய விழாக்கள் சகலருக்கும் பொதுவானவையே. இவ்விழாக்கள் கொண்டாடப்படும் முக்கியத்துவம் பற்றி இங்கு ஆராய்வோம்.

முதலாவதாக இவ்விழாக்கள், சமயப் பற்றை அதிகரிக்கச் செய்கின்றன. சமயப்பற்று ஆன்மீகப் பேரொளியைப் பரப்புகிறது; ஆன்மீகத் தெளிவு உள்ளவர்கள் அநியாயம் செய்வதில்லை; குற்றங்கள் செய்வதில்லை. நல்வழியில் நடக்கிறார்கள். ஒளிமிகுந்த வாழ்வைப் பெறுகிறார்கள். இவ்விழாக் காலங்களில் கடவுளர் சிலைகள் பலவும் கவின் சொரிய அலங்கரிக்கப்படுவது வழக்கம். குறித்த நேரங்களில் இசைப் பாடல்களை இனிமையாகப் பாடி வணங்குவதுண்டு, இப்பாடல்கள் இறைவனின் மிகுந்த கருணை, நற்பண்பு, வீரதீரச் செயல்களை விரித்துரைப்பதாக உள்ளன. இவற்றைப் பாடியும் கேட்டும் பரவசங்கொள்வோரின் சமயப்பற்றும் இதனால் அதிகரிக்கிறது.

ஆன்மாவானது சார்ந்ததன் வண்ணம் நிற்கும் இயல்பினது. சூழல் நிலைமைகளைப் பொறுத்து ஒவ்வொருவரின் மன நிலைகளும் மாறத்தக்கன. சமயவிழாக் காலங்களில் ஊரெல்லாம் தெய்வீக மணம் கமழும். சிவபக்தர் நாவெல்லாம் "நமசிவாய" உரைக்கும். சகல இடங்களிலும் தூய்மை பொலிவுடன் துலங்கும். புறத்தின் தூய்மையும் தெய்வீகமும் மனித அகத்துள்ளே. மனங்களுள்ளே புகுந்து கொள்ளும். சமயவிழாக்கள் முனைப்பாகப் பெரியோர்களால் செய்யப்படுகிறது. இதனால் இளஞ்சமூகத்திடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொறுப்புக்கள் மரபுரீதியாகக் கையளிக்கப்படுகின்றன, சந்ததி சந்ததியாக இவ்வழக்கம் தொடர்கிறது இதனால் பொறுப்புக்களைச் செவ்வனே ஆற்றும் தன்மை மாணவப் பருவத்திலேயே ஏற்பட்டுவிடுகிறது.

பாடசாலைகளில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. சக்தியின் மூவேறு வடிவங்களான துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியை வாழ்த்தி வணங்கி விரதமிருந்து வரங்கள் பெறுவது வழக்கம். இந் நாள்களில் மாணவர் பலரும் அகமும் புறமும் ஒளிவிளங்க நற்பண்புகள் பலவற்றுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திவிடுகிறார்கள்.

முதலாவதாகக் கூட்டு முயற்சி எனும் மாண்பு மிக்க பண்பு வளர்க்கப்படுகிறது. வகுப்பு ரீதியான அலங்காரங்கள் தொகுக்கப்பட்டே விழாநாள்கள் நகர்த்தப்படுகின்றன. சிறு சிறு மனக்கசப்புக்களைத் தூரத் தள்ளிவிட்டு மாணவர் செயற்படுவதால் ஒற்றுமை எனும் மகத்தான சக்தி பேணி வளர்க்கப்படுகிறது.

விழாக் காலங்களில் விஷேசமாக, காலை வேளைகளில் குறிப்பிட்ட ஒழுங்கின்படி, சொற்பொழிவுகள் ஆற்றப்படுகின்றன, இதனால் நற்கருத்துக்கள் விதைக்கப்படுவதோடு மதப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் வளர்க்கப்படுகிறது. அத்துடன் மாணவர்களின் பேச்சுத்திறன் பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறது. மாணவர்களே சக மாணவர்களுக்கு வழிகாட்டுகின்ற அரிய சந்தர்ப்பம் இதுவாகும்.

பத்தாம் நாளான விஜயதசமி அன்று, கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மாணவரின் உள்ளார்ந்த திறமைகளை இனங்காண - வளர்க்க - இவை உறுதுணையாகின்றன. எந்த ஒரு மனிதனும் தனித்துவத் திறமைகளைக் கொண்டே இருக்கிறான். அவை வெளிக் கொணரப்படுவதால் மந்தகதி மாணவர்களும் கூட உற்சாகமாக வாழ்வினை அனுபவிக்கும் ஒரு காலகட்டமாக இது விளங்குகிறது.

தலைமை வகிக்கும் "பண்பும் இவ்விழா நிகழ்ச்சிகளினால் விருத்தியாக்கப்படுகிறது. சுருங்கக் கூறின் பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளில் சமய விழாக்கள் மூலம் ஓர் அனுபவக் கல்வியே புகுத்தப்படுகிறது. ஏட்டுக் கல்வியைவிட அனுபவக் கல்வி மனதில் ஆழமாகப் பதிகிறது. இதனால் மாணவனானவன் வாழ்விற்கு மிகத் தயார்ப்படுத்தப்படுகிறான்.

சமயவிழாக்கள் பெரும்பாலும் தீமைகள் தெய்வங்களால் அழிக்கப்பட்ட வரலாறுகளை நினைவுகூர்வதாயே உள்ளன. இக்கதைகள் கற்பனையாயிருக்கும் பட்சத்திலும் கூட ''தீயன செய்தால் தீமைகள் விளைகின்ற'' கருத்து குழந்தைப் பருவத்திலேயே ஆழமாகப் பதிக்கப்படுகின்றன நல்லெண்ணங்களின் மேம்பாட்டுக்கும் தீயெண்ணங்களின் அகல்வுக்கும் இவை உதவுகின்றன.

கிறிஸ்தவர்களின் ஒளிவிழா போன்றனவும் உடல் உளத் திறன்களை வளர்க்கின்றன. செய்நன்றி மறவாச் சிரிய பண்பும் விருத்தியாக்கப்படுகின்றது. இக்காரணம் பற்றியே மக்கள் நலம் வாழ மரித்த யேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் நாள்களையும் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

பலமதப் பிள்ளைகள் கற்கின்ற ஒரு பாடசாலையில் வெவ்வேறு விழாக்களும் எடுக்கப்படுவதால் பல்மத அறிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அத்துடன் எம்மதத்தையும் மதிக்கின்ற பண்பு சிறுவயதிலேயே ஊன்றப்படுகிறது.

அவசரகதியில் இயங்குகின்ற இயந்திர யுகத்தில் இவ்விழாப் பொழுதுகள் இனந்தெரியாத நிறைவையும் ஆழ்ந்த நிம்மதியையும் தருகின்றன. ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவர் தாம் நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப்போகிறார்கள். இவ்விழாக்களால் தெய்வ நம்பிக்கை பெருகுகிறது. மாணவருள்ளத்தில் ஒளி வீசுகிறது. நாளைய நாட்டுக்கு ஒளியேற்றும் அகல்விளக்குகளாய் மாணவர் சமுதாயத்தையே பிரகாசிக்க வைக்கும் இவ்விழாக்கள் இனியும் வளர்க! தனித்துவமான இவ்விழாவினாலாய நன்மைகள் பெருகுக!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக் கிராமமும் அகோர சூறாவளியும்

சின்னப் பூக்கள் சாலையோரமெல்லாம் பரந்து கிடந்தன. சோலைகள் என்றால் அதைப்பற்றிச் சொல்லவே தேவையில்லை. பாலைவெளியென்று பேச்சுக்குக்கூட ஓரிடமில்லை. இயற்கை தனது அழகிற்குச் சூட்டிய மணிமகுடமாய்க் காட்சியளித்தது எமது கிராமம். எண்ணிப் பார்த்தால் சின்னக் கிராமம் தான், ஆனால் அது சொர்க்கம். இதுபற்றித் தர்க்கம் செய்யத் தேவையில்லை. ஏனெனில் எமது கிராமத்தின் பெயர்கூடக் காரணத்துடனேயேதான் சொர்க்கபுரி என நிலவுவதாயிற்று.

நீலக்கடல் தழுவும் நெய்தல் நிலம் கிராமத்தை ஒரு புறம் அழகு செய்தது. கண்ணின் முன்னே கடற்கரையோர வெண்மணல் விரிந்து கிடந்தது. அவற்றில் சின்னப் பொட்டுக்களாய் வாடிவீடுகளும் சிறு குடிசைகளும் காட்சி தந்தன கடற்செல்வங்கள் பலவும் வஞ்சனைஇன்றி வெயிலில் காய்ந்தன. நுரை சுமந்த அலைகள் கரையோரம் வந்து எம் கிராமத்துத் தரை தொட்டுப் பின்னர் நிரையாகப் போயின. இவ்வடிவழகு வார்த்தைகளுள் அடங்குவதில்லை.

மறுபுறம் மருதநிலம் பேரழகுடன் பொலிந்தது. பசும் கடலாய் பயிர்கள் பரந்து வளம் கொழிக்கும் பூமியது! செந்நெற் கதிர்கள் சீதளப் பூங்காற்றுடன் சேர்ந்தாடின. நடனக் கலையிற் தேர்ந்த நளின நங்கையராய் கதிர்கண்ட நெற்பயிர்கள் நாணி நிலம் நோக்கின. கிழங்கு வகைகளோ நிலத்தின் கீழ் விளைச்சலை ஈன்று நிமிர்ந்து சிரித்தன. அவரையும் துவரையும் நிரைகளாய் அணிவகுத்து நின்றன.

பரந்த பனங்கூடல்கள் எமது கிராமத்துக்கு இனங் காண முடியாத அற்புத அழகை அள்ளி வழங்கின. கரிய நிறத்துக் காவலராய் கம்பீரமாய் அவை நிமிர்ந்து நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத் தொழில் மலிந்த எம்மூரில் வீடுகள் தோறும் வாழைகள் செழித்துக் கிடந்தன. குலையீன்ற வாழையில் தாய்மைப் பொலிவும் இளம் வாழைகளில் கன்னி அழகும் துலங்கின. செந்நிறத் தம்பளப் பூச்சிகள் கும்பலாய்ச் சேர்ந்தது போல மிளகாய்ப் பழங்கள் முற்றத்தில் பரப்பி யிருந்தன. கமுகும் .கரும்பும் அழகை அதிகரிக்கச் செய்தன. இதுவே எமது அழகுக் கிராமத்தின் அன்றைய காட்சி யாகும்,

எமது கிராம மக்கள் உள்ளும் புறமும் ஒன்றேயான வர்கள். கள்ளம் கபடம் அற்றவர்கள். வெள்ளை உள் ளம் கொண்டவர்கள். அவர்களுக்கு ஏனிந்த விபரீதம்? இன்று வரை விடையில்லாக் கேள்வியது. அன்று... திடீ ரெனக் கருமேகங்கள் திரண்டன. விரிவான் பரப்பின் வெண்மேகங்கள் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன மஞ் சள் ஒளி விரிக்கும் மலரவன் கொஞ்சம் கூட முகம் காட்ட மறுத்தான். வானொலிகளில் விஷேச அறிவிப்புக்கள் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டன. பெரியோர் முகத்தில் கலவரம் குடிகொண்டாலும் சிறுவர்கள் பலரும் சந்தோஷ மாகவே காணப்பட்டனர். மிக நவீன முறையில் அமைக்கப் பட்ட எம் வீட்டிலிருந்து பார்க்கும் போது மருத நிலமும் நெய்தனிலமும் தெளிவாகவே தெரிவது வழக்கம். ஆகவே நான் வீட்டிலிருந்தபடி பல காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

வெள்ளிக் கம்பிகளாய் வானிலிருந்து மண்ணுக்கு வந்து விழுந்த மழைத்துளிகள் அழகான காட்சியாயிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாய் மழைத்துளிகள் அடர்த்தியாயின. வயல் வெளிகளில் கருநிறத்தில் வானம் இருண்டு கிடந்தது. சிறு பட்சிகள் கலவரமாய்ப் பறந்து சென்றன. கடலோரக் குடிகள் தம் வாழ்மனையை விட்டு வர முடியாமல் தவித்த படி நின்றார்கள். மற்றும் சிலரோ 'விதித்தபடி வாழ்வு' என்று விட்டேற்றியாய் நடந்தார்கள். வானொலியில் அபாய அறிவிப்புத் தொடர்ந்தது, திடீர் எனக் காற்றின் வேகம் அதிகரித்தது. சுழல் காற்று சந்தமாய் ஊதிற்று. பெருமரங்கள் முறிந்தமோதிலும் சிறு மரங்கள் புயல் காற் றுடன் கூடி ஆடின. இலைகள் பல நிலத்தில் !சொரிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிமுழக்கம் இதயத்தை அதிர வைத்தது. இயற்கைத் தாய் இடித்தாளம் தட்ட கடலலைகளின் நடனம் வலுத்தது.

வங்கக் கடலில் மையம் கொண்ட தாழமுக்கம் வலது புறக் கரையோரமாக நகர்வதாய் வானொலி அறிவித்தது விலங்குகளும் மனிதர்களும் புகலிடம் தேடி ஓடினர். இரவின் வரவு பொழுதின் பயங்கரத்தை இன்னும் கூட்டிக் காட்டிற்று. தென்றலுக்குக்கூட இப்படி ஒரு முகமுண்டா? இயற்கை உக்கிரம் கொண்டால் இப்படியும் அக்கிரமம் செய்யுமா? அளவிடமுடியாத துயரமும் பயமும் சூழ அனைவரும் மௌனமாய் இருந்தோம். கனத்த இருள் வெளியில் மட்டுமின்றி, நம்மனங்களிலும் சூழ்ந்திருந்தது. காலமோ எதையும் கவனிக்காது, கடும் புயல், மழையுடன் சேர்ந்து நடந்தது.

மறுநாள் புலர்கையில் மழையின் தீவிரம் குறைந்தது. வேதனை உணர்வே விரிந்து பரந்தது. கால்நடைகள் பல ஆங்காங்கே இறந்து கிடந்தன. கதிர் சொரிந்த நெல் வினங்களை மேவி நீர்ப்பரப்பே தெரிந்தது. குலையீன்ற வாழைகள் தம்நிலைசாய்ந்து முறிந்து கிடந்தன. மருத நிலக் குடிசைகளில் சில இருந்த இடமேயில்லை. அவர்கள் வருந்தி அழுத கதை வார்த்தைகளால் சொல்ல வழியில்லை.

கரையோரப்பகுதி கூடுதலாக உயிரிழப்புக்குள்ளாகி இருந்தது. நீலக்கடல் நீண்டு வாடிவீடுகளை விழுங்கி இருந்தது. மீனினம் தேடிக் கடலுட் புகுந்தோரில் கனபேர் திரும்பவேயில்லை. அலைகளின் துடிப்பு இன்னும் அடங்கியபாடில்லை. கடலன்னை கிராமத்தைக் காவு கொண்டதையிட்டுப் பலர் துடிதுடித்து அழுதார்கள். நிமிர்ந்த பனைகளிற் பல முறிந்து போயின. கமுகும் கரும்பும் சில மரங்களே எஞ்சி இருந்தன. பாடசாலைகளில் பல மக்கள் அகதிகளாய்த் தஞ்சம் புகுந்தனர். பொதுநலவமைப்புக்கள் அவர்களுக்கு உதவ முன்வந்தன.

நிறையத்தான் இழந்துவிட்டோம். அதனாலென்ன, நெஞ்சில் உரம் மிகவுண்டு. நாமெல்லாம் சேர்ந்து உழைப்போம். அழகிய பூக்கள் சாய்ந்தாட சீதளத் தென்றல் சுகம் சேர்க்க பழகிய எங்கள் பழைய அழகு நிச்சயமொருநாள் மீண்டும் மலரும்.

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் வாழ்வும்

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டினை மிக நெருங்கி நின்று கொண்டிருக்கின்றோம். இயந்திர யுகமும் அவசரகதியும் வாழ்வாகிப் போய்விட்டன மண்ணின் மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்துத் தண்மதியில் குதித்துவிட்டோம். தலைநிமிர்ந்து நின்று கொண்டோம். தொழினுட்பம், பொறியியல், மருத்துவம், இலக்கியம், மொழி அறிவு எதிலும் வெற்றிக்கொடி நாட்டியபடி மானுடம் பயணம் செய்கின்றது. இவ்வளப்பரிய சாதனைகளின் அடித்தளமாக அமைந்திருப்பது விஞ்ஞானமே. இவ் விஞ்ஞானம் வாழ்வொடு கொண்ட தொடர்புகளையும் நயநட்டங்களையும் சற்றே சீர்தூக்கிப் பார்ப்போம்.

விரிந்து பரந்த உலகை அடக்கியாளும் அளவிற்கு மானுடம் தழைத்ததற்குக் காரணம் விஞ்ஞானமே ஆகும். விஞ்ஞான வளர்ச்சி சடுதியாக வந்ததொரு சாதனை அல்ல. அன்றைய நாட்களில் ஆதிமனிதன் விலங்கொடு விலங்காய்ப் பேதமற்று வாழ்ந்தான். காலப்போக்கில் சிந்தனைவடிவில் விஞ்ஞானச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. செயலார்வங்களும் சிந்தனைத் திருப்பங்களும் சேர ஏற்றி வைத்த அகல் பிரகாசிக்கத் தொடங்கியது. தீயும், சுழலும் சக்கரங்களும் பிறந்தன. மனித குலத்துக்கே உரித்தான மொழிப் பயன்பாடும் கருவிக்கையாட்சியும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பெரிதுமுதவின. விலங்கு நடத்தையிலிருந்து மனிதன் வேகமாய் விலகத் தொடங்கினான்.

இன்று விஞ்ஞானம் வானத்துக்கும் பூமிக்குமிடையே விரிந்து பரந்து கிடக்கின்றது. நெருப்பிற் கலந்த சூடு போல வாழ்வொடு பிணைந்து நடக்கின்றது. விஞ்ஞானச் சுடரொளி பரவாத இடம்தான் எது? முதலாவதாக போக்குவரத்துத் துறையை எடுத்துநோக்குவோம். அன்று கால் நடையாகவே பலரும் பயணித்தார்கள். பயணச் சிரமமும் நேரவிரயமும் சொல்லுந்தரமன்று. துவிச்சக்கர வண்டியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து விண்வெளிக் கலம்வரை கண்டுபிடித்த மானுடம் இறுமாப்புடன் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அடுத்ததாக, அன்றைய நாட்களில் இயற்கையே மனிதனை ஆண்டுகொண்டிருந்தது. மரணம் வாழ்வின் முடிவுதான். ஆனால், இன்றைய மருத்துவ முன்னேற்றம் சாவிற்குச் சாவுமணி அடிக்குமளவில் வளர்ந்து நிற்கின்றது. தொற்று நோயால் பற்றப்பட்டபோது 'தெய்வசீற்றம்' என்று நம்பி நேர்த்தி செய்த மனித இனம் இன்று இதய மாற்றுச் சத்திரசிகிச்சையைக் கடந்துவிட்டது. அதீத சக்திவாய்ந்த கதிரியல் மருத்துவம் இன்று சகஜமாகிப் போய்விட்டது. பாரம்பரிய இயல்புகள் பற்றிய அறிவால் குறைபாடற்ற குழந்தைகள் பிறப்பிக்கப்படுகின்றார்கள். செயற்கையாகப் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் உருவாக்கப்படுகின்றனர். 'இயற்கையைத் தன்வசமாக்கி, ''இறப்பே அறியாப் பூமியாக' வாழ்நிலத்தை மாற்ற மனிதம் தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருக்கின்றது.

இனி, விவசாயத் துறையில் விஞ்ஞானம் ஏற்படுத்திய திருப்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இன்று கனவித இயந்திரங்களும் பலவேறு கருவிகளும் கண்டுபிடிக்கப்பட் டுவிட்டன. உழுதல், விதைத்தல், களைஎடுத்தல், எருவிடல், நீரிறைத்தல் எல்லாமே இயந்திரமாகிப் போயின. பயிர் வகைகளின் நோய்களைப் பாகுபடுத்தி ஏற்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒட்டுதல், இழைய வளர்ப்பு போன்றவற்றால் பல்லாயிரக கணக்காண தாவரங்கள் குறுகிய நேரத்தில் பிறப்பிக்கப்படுகின்றன. செயற்கையாகப் பூத்தல், காய்த்தல் என விருத்திநிலைகள் யாவும் ஓமோன்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. விஞ்ஞானத்தின் கை பற்றியபடி விவசாயம் வீறுநடை போடுகின்றது.

மின்சாரம் முகிழ்த்தபின் கைத்தொழிற் துறையில் நிகழ்ந்த மாற்றங்கள் மிகப் பெரியன. வானொலியும், தொலைக் காட்சியும், மின் அழுத்தியும், மின் அடுப்பும், தொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியும், குளிர்சாதனப் பெட்டியுமாக மின்னியல் சாதனங்களின் பட்டியல் மிகவும் நீள்கின்றது. சீதோஷ்ண நிலைகளைச் சீராக்க மின்வளிச் சீராக்கிகள் உள்ளன எந்த வேலைக்கும் தேவையான வலுவும் நேரமும் குறைக்கப் பட்டுள்ளன. இதனால் அழகுணர்ச்சி வளர வாய்ப்புக் கிடைக்கிறது. நுட்பக் கலைகள் சிறக்கின்றன. நாகரிகம் மேம்படுகிறது. மனிதனையே கட்டுப்படுத்தும் அளவுக்கு க்கணனிப் பயன்பாடு மேவி நிற்கிறது. கல்வி, தொழினுட்பம், காலநிலை சுகாதாரம் போன்ற சகல துறைகளிலும் கணனிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. பெற்ற மகன் தந்தையை வழிப்படுத்துவது போல, விஞ்ஞானமே இன்று மனிதனை வழிகாட்டிஆள்கின்றது.

இத்தனை நன்மை தரும் விஞ்ஞானம், இன்று அகில உலகத்துக்கும் அச்சுறுத்தலாகவும் விளங்குகிறது. அணுக் குண்டுகள் கணப்பொழுதில் உலகையேஅழித்துவிட வல்லன. ஆயிரமாயிரமாய்ப் பாவனைக்கு வருகின்ற ஆயுதங்களின் அழிவுசக்தி அதிவிரைவில் பெருகி வருகின்றது. மனிதன் மொழிப் பாகுபாடு, நிறவேறுபாடு வேறும் பிற காரணங்களால் போர்களை வளர்க்கின்றான். அங்கவீனர்களும் அநாதைகளும் அதிகரிக்கின்றனர். கட்டிடங்கள்இடிகின்றன. கலாசாரங்கள் சிதைகின்றன. ''எதற்கும் பரிகாரமுண்டு'' என்ற துணிவால் தாராளமாகவே சமுதாய ஒழுக்கக் கேடுகளில் ஈடுபடுகின்றான். நுட்பமான முறையில் குற்றங்களைச் செய்து தப்பித்துக் கொள்கின்றான். தனித்து ஒரு மனிதன் இயந்திர உதவியுடன் இயங்க முடிவதால் உறவுகளைக்கூடச் சடுதியில் உதறி விடுகின்றான் எங்கும் குற்றங்கள் பெருகுகின்றன. கைகளாலே மீண்டும் மீண்டும் தன் கண்களைக் குத்திக்கொள்ளும் சிறுபிள்ளையாய் மனித இனம் சீரழிந்து கிடக்கின்றது.

அளவோடு எரிந்தால் அது விளக்கு. அளவு மீறினால் அது நெருப்பு. தீயைத் தகுந்த வழியில் பயன்படுத்திப் பயன்பெறுகிறோம். அதுபோல விஞ்ஞான அறிவையும் விருத்தியுற்ற அறிவு கொண்டு பயன்படுத்துவோம். வளம் பல பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு வாழ்வும் மனித வாழ்வும் தாவரங்களிலேயே தங்கியுள்ளன

பசுமையைப் புனைந்து, மீத இடத்தில் நீலக்கடலைப் போர்த்திருக்கும் பூமியானது உயிர்வாழ்தல் உள்ள ஒரேயொரு கோளாக இன்றுவரை அறியப்பட்டுள்ளது. கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரி முதல் விண்ணளந்து நிற்கின்ற பெருவிருட்சங்கள்வரை எண்ணற்ற அங்கிகளைக் கொண்டிருக்கின்றது பூமியின் உயிரின மண்டலம். உயிரின மண்டலத்தின் எல்லைகளாக மேலே ஆகாயமும் கீழே ஆழ் கடலும் அகன்று பரந்திருக்கின்றன

உயிர் வாழும் அங்கிகள் சில இயல்புகளைக் கொண்டு தாவரம், விலங்கு எனத் தனித்தனி வகைப்படுத்தப்படுகின்றன. தாமே சுயமாய் உணவு தயாரிக்கின்ற தாவரங்கள் காலச் சுழற்சியில் கூர்ப்புற்றுக் கோலம் மாறின. விலங்கில் நிகழ்ந்த கூர்ப்பு இறுதியில் ஆற்றலுடைய மனிதனை ஆளித்தது. இக்கூர்ப்புகள் சமாந்தரமாக ஒன்றுடனொன்று தொடர்பற்று நிகழ்ந்தன. ஆயினும் தாவர வாழ்வும் விலங்கு வாழ்வும் பேதமற்று ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன.

இது உயிர்கள் தோற்றுவிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை ஏன் இனியும்கூட தொடர்கின்ற பிணைப்பாகும். தோன்றிய உயிர்களின் தேவையை நிறைக்கும். உணவுக்களஞ்சியங்களாக தாவரங்களே விளங்கின. விண் சென்று வரலாறு படைக்கின்ற மனிதனோ அன்றி வேறு விலங்கினமோ செய்ய முடியாத அற்புதச் செயலாக இவ்வொளித் தொகுப்பு அமைகின்றது ஆம்! ஒளி செய்வதைத் தொழிலாகக் கொண்ட கதிரவனின் கிரணங்களைக் கொண்டு உணவு தயாரிக்கின்ற ஆற்றல் பச்சைத் தாவரங்களுக்கு மட்டுமே உரியது.

கரியமில வாயுவையும் நீரையும் இணைத்து இலைகளில் உணவாக தேக்குகின்ற தன்மையால் தாவரங்களே உலகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப உணவுற்பத்தியாளர்களாக விளங்குகின்றன எந்த ஒரு விலங்கும் தாவரத்திடமிருந்து உணவைப் பெறுகின்றது. உணவு வழங்கலானது நேரடியாக நிகழலாம். அன்றி மறைமுகமாகத் தாவரவுண்ணியை ஓர் அங்கி உண்பதன் மூலம் நடைபெறலாம்.

இந்த உணவாக்கத்தின்போது உயிர்காக்கும் இன்னொரு உன்னதப் பணியும்கூடவே நிகழ்கின்றது. இதன்போது சுவாசிக்கும் அங்கிகள் யாவும் வேண்டி நிற்கும் பிராணவாயுவான ஒட்சிசனை தாவரங்கள் வழங்குகின்றன. இந்த ஒட்சிசனானது குறித்த நிபந்தனைகளில் ஓசோன் எனும் வாயு மண்டலக் கவசத்தைத் தோற்றுவிக்கின்றது.

அண்டவெளியின் அனல் மிகுந்த கதிர்களை அணுகவிடாமல் பூமியைக் காப்பது ஓசோன் கவசமேயாகும். இக் காற்றுக்கவசம் இல்லையெனின் பூமி கணப்பொழுதில் உருக்குலைவது நிச்சயம். ஆகவே மறைமுகமாகக் கூறுவதானால் மரங்களே பூமியினைக் காக்கும் கரங்களாய் கடமையாற்றுகின்றன எனலாம்.

மேலும், சூழலின் வெப்பநிலையை வெகுசீராகப் பேணுகின்ற ஆற்றலும் தாவரங்களிடத்தில் உண்டு. வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதில் அதிக பங்கு வகிக்கின்ற கரியமில வாயுவைத் தாவரங்கள் தம்மகத்தே உறிஞ்சுகின்றன. இதன்மூலம் துருவப்பனிக்கட்டிகள் உருகி நிலங்களை நீர் மூடும் அபாயமும் தடுக்கப்படுகின்றது விலங்குகளின் வாழ்விடங்கள் காக்கப்படுகின்றன.

இன்னும் மிதந்து செல்லும் மேகங்களை வழிமறித்து மழை பொழிவிக்கும் தன்மையும் உயர் மரங்களுக்கு உண்டு. இதனால விலங்குகளின் உயிர்வாழ்தலுக்குத் தேவையான நீர் வழங்கலிலும் இவற்றுக்கு அரும்பங்குண்டு. இது மட்டுமா? கானகத்தில் உயிர்வாழும் கணக்கற்ற அங்கிகளின் இல்லமாகத் திகழ்பவையும் தாவரங்களே. இயற்கை உருவமைத்த இவ்வில்லங்கள் பாதுகாப்பானவையாகவும் பயன் மிக்கனவாகவும் விலங்குகளுக்கு உதவுகின்றன.

மேம்பட்ட மனிதகுலத்தின் வளர்ச்சியிலும் தாவரங்கள் ஆற்றுகின்ற அரும்பணிகள் மிகப் பல. மனித சாதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தாவரங்கள் வழங்கிய ஆதாரங்கள் அநேகம்! இலையும் குழையும் இழைத்துப்புனைந்த இயற்கை உடை தான் மனித நாகரிகத்தின் மலர்ச்சியின் முதற்படி என்றால் மிகையல்ல.

நாடோடி மனிதனின் நிலையான ஓரிடவாழ்வுக்கு அத்திவாரமிட்டவைகூட ஆற்றங்கரையோரப் பயிர்ச்செய்கைகள் தான்! சமூக வாழ்வுடன் மனிதன் சங்கமித்தபோது தாவரங்களும் அவன் வாழ்வில் ஓர் அங்கமாகிவிட்டன.

உருளும் மரக்குற்றி, சில்லைப்பற்றிய உணர்வைக் கொடுத்தது. சில்லும் தடியும் இணைந்து சிறு எந்திரம் ஆனது. சிதைந்த பசுமரப் பகுதிகள் எரிபொருளாய் நிலத்தினின்று மீளப் பிறந்தன. எல்லாம் இணைந்த கணத்தில் வல்லமை பொருந்திய எந்திரங்கள் உருவாகின. கைத்திறம் வளர கைத்தொழில் சிறந்தது; அறிவியல் வளர்ந்தது.

மனிதன் மேன்மேலும் தாவரங்களைத தன் வாழ்வின் உயர்வுக்காகப் பயன்படுத்துகின்றான். மாடமாளிகைகள், நீண்ட பாலங்கள், பாதைகள் செய்ய பசும்மரங்கள் பயன்படுகின்றன. உடைகள் நெய்ய உறுதுணை புரிகின்றன. உயிரைக் காக்கும் மருந்துகள் செய்யவும் அருந்துணை ஆகின்றன. காகிதத் தாள்களில், நறுமணம் வீசும்வாசனைத் தைலங்களில் என எங்கும் எதிலும் தாவரங்கள் பங்குபெற்றிருக்கின்றன.

உணவாய், உயிர்மூச்சாய். உடையணியாய், வாழிடமாய், நோய் வெல்லும் அருமருந்தாய், எரிபொருளாய், எல்லாமாய் நின்று எண்ணற்ற பயன்தரும் தாவரங்களின் வேர் முதல் அரும்புவரை மனித வாழ்வும் விலங்குவாழ்வும் வேறுபாடற்று ஊடுருவி நிற்கின்றன.

இவ்வாறு மனித, விலங்குகளின் உயிர்வாழ்வுக்கு அடிநாதமாய் விளங்குகின்ற தாவரங்களின் முக்கியத்துவத்தை இன்றைய மனிதன் நன்கு உணர்ந்துள்ளான். இதனாலேயே தாவரகளை உருவாக்குகின்ற பேணுகின்ற திட்டங்கள் உயிர்ப்புடன் செயற்படுத்தப்படுகின்றன. ஆம் மனிதன் தாவரங்களை வளர்த்து தன்னை உயர்த்தத் தொடங்கிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக் காட்சி

பசும் பரப்பாய்ப் பரந்து கிடக்கின்றது வயல்வெளி! கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சை வண்ணத்தின் செழுமை விரிந்து கிடக்கிறது. கதிர் சுமந்த நெல்லினங்கள் காற்றோடு சேர்ந்தாடுகின்றன. காலைக் கதிரொளி விரியத் தொடங்குகின்ற ஒரு கவின் பொழுதில் அறுவடைக் காட்சியின் அழகு காண நீங்களும் வயல்வெளிக்கு வாருங்களேன்!

விரிந்த வயற்பரப்பு வரப்புகளால் எல்லையிடப்பட்டிருந்தது. கதிர்கொண்ட நெல்லினங்கள் நிலம்நோக்கித் தாழ்ந்திருந்தன. தாய்மை எனும் தெய்வீகப் பேரழகு அவற்றிற் பொலிந்தது. நற்குடிப் பிறந்த நங்கை நாணி நகும் நளினம் அவற்றில் வெளிப்பட்டது. காலையிளந்தென்றல் தழுவ நெல்லினங்கள் 'கலகல' எனச் சத்தமிடுகின்றன. அன்றிப் பதர்கள் பண்பற்ற நடத்தையுள்ள பாவையர்போல தம் முகம் காட்டிச் சிரிக்கின்றன. அறிவின் தெளிவு அதிகமாக, அமைதியும் அடக்கமும் பொலியும் தன்மை அந்த இயற்கைக் கோலத்தில் இயல்பாய் எழுதப்படுகிறது.

வரம்புகளின் பிரிவுகளுக்கேற்ப வயது வேறுபாடற்று நெல்லினங்கள் காணப்படுகின்றன. சில கடும்பச்சைக் கவினோடும், சில வெளிர்ப்பச்சை நிறத்தோடும் மற்றும் சில பொன்மஞ்சள் வர்ணத்திலும் துலங்குகின்றன. சீதளப் பூங்காற்றுடன் சேர்ந்தாடியபடி, கன்னிப்பருவத்து நெல்லினங்கள் ஒலி செய்கின்றன. அவ்வோசை மிருதுவான இசையாக மனத்தினை வருடுகின்றது. பசும்பரப்பில் செங்கதிரவனின் பொன் மஞ்சள் வண்ணச் சிற்றொளி பட்டுக் கலக்க புதிய வர்ணத்தில் செந்நெல் வயல் பொலிகின்றது.

வயல்வரப்புகளின் வழியே உழைப்பாளிகள் நடக்கின்றார்கள். ஆண்கள் உறுதிகொண்ட திண்ணிய உடம்புடன் கம்பீரமாகச் செல்கின்றார்கள். அரிவாள் சகிதம் சேர்ந்து நடக்கும் அரிவையரைக் காணுங்கள். அவர்கள் நதிபோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளின நடை பயில்பவர்களில்லை உழைத்து உரமேறிய உடலினர். சேற்று வயல் நீரில் சிறுமீன்கள் சந்தோஷமாகத் துள்ளி விளையாடுகின்றன. கொக்குக் கூட்டங்கள் இடையிடையே மண் மீது விரிந்த வெண்பூக்களாய்க் கண்கொள்ளா அழகுடன் காணப்படுகின்றன செங்கால் நாரைகள் மீன் இரை தேடி நிரையாய்ப் பறந்து வந்து வயற்கரையில் அமர்கின்றன.

வரப்புகள் மனிதர்களுக்கு மட்டும் தானே! வண்ணச் சிறு பட்சிகளுக்கு எல்லைகள் தாம் ஏது? அவை வயலவெளி முழுதும் திரிந்து செந்நெல் மணிகளைத் தம் செவ்வாயால் பொறுக்குகின்றன. கனமில்லாத சந்தோஷ மனத்துடன் இனத்தவருடன் சேர்ந்து இனிய குரலில் மிழற்றுகின்றன. இயற்கையின் சங்கீதம் தான் எத்துணை இனிமையானது

உழைப்பாளர் தம் அறுவடைப் பகுதிக்கு வந்ததும்? ''அணி அணி''யாக நின்றனர். அவர்களுள் வயதால் முதிர்ந்த பெரியார் ஒருவர் ''வயலோர விநாயகரை'' வேண்டித் தேங்காய் உடைத்து அறுவடைத் தொழிலை ஆரம்பித்து வைக்கிறார். சூரியச் சுடர் வானவெளியிலே மேலேறிக் கொண்டிருக்கிறது.

உழைப்பாளர் கையிலே அரிவாள் சுழலும் அழகே தனி. அவர்கள் வெற்றிலை சப்பியபடி, வெகு இலாவகமாய்ச் செங்கதிர்களை அறுத்துக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முகத்தில் உழைப்பின் ஒளியும் பெருமிதமும் விகசிக்கின்றன உழைப்பின் அலுப்புக் களைப்பைத் தருகிறது. ஆனால் அவர்கள் இளைத்து மூச்சுவிட்டு ஓயுதல் செய்யவில்லை. இனிமையான பாடல்களைப் பாடி உற்சாகம் கொள்கின்றனர்.

விளைநெல் சேகரிக்கும் போது விடுபட்ட பறிகதிர்களைப் பொறுக்குவதற்குப் போட்டியிடும் ஏழைச்சிறார்களின் நிலை மனத்துக்கு மிகுந்த வேதனை தருகிறது. அதேவேளையில் கிராமத்துச் சிறுவர்கள் சிலர் அங்கே ஓடி விளையாடுகின்றனர். விளைநெல் அகற்றப்பட்ட பிரதேசம் அங்கு விளையாட்டு நிலமாக மாறிக் கொண்டிருக்கிறது.

6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாள்வரை நெல்லுடன் சேர்ந்து வேறுபாடற்று வளர்ந்த புல்லினங்களைப் புறந்தள்ளிய உழைப்பாளர் விளைகதிரைச் சேர்க்கிறார்கள் அறுவடையின் போது கழித்துவிடப்பட்ட களைகளை ஆங்காங்கே கட்டி விடப்பட்ட மாடுகள் ஆவலுடன் மேய்கின்றன

இதேபொழுதில் மறுவயற் துண்டில் சிலர் சூடு மிதிக்கிறார்கள். இயந்திர உதவி வேலையை இலகுவாக்கின்றது பெண்கள் பொன்வண்ணக் கதிர் சொரிந்த செந்நெல் மணிகளைக் காற்றில் தூற்றுகின்றனர். 'பொலிப்பாட்டுப்' பிறக்கிறது மனதில் மகிழ்ச்சி பொங்குகிறது வாகனங்கள் மூலம் மண்தந்த விளைச்சலைத் தம்வீடுகொண்டு செ.. கின்றனர். எஞ்சிக் கிடக்கின்ற நெல்லின மீதிகளும் வண்டிகளில் ஏற்றப்பட்டு வேறிடம் கொண்டு செல்லப்படுகின்றன காளை மாடுகளின் கழுத்துச் சலங்கைகள் ஒலியுடன் கூடிய எதிர்காலத்தை வரவேற்பது போல ஒலிக்கின்றன.

சூரியன் உச்சிக்கு வந்து விடுகிறான். வெயிலின் உக்கிரத்தில் வியர்வை சேரவும் சோர்வில்லாதபடி அறுவடைக் கோலம் தொடர்கிறது. மதிய உணவினை வயல்வரப்பிலிருந்து உண்ணுகிறார்கள். மீண்டும் தொழில் தொடர்கிறது. பாட்டுங் கூத்தும் பரவசக் கூச்சலும் சேர்ந்த நவரசப் பொழுதாய் நாள் நகர்கிறது.

மாலைச்சூரியர் மேற்கில் மறையும் வேளை நெருங்குகிறது. மங்கிய செவ்வொளி எங்கும் சிரிக்கிறது. அறுவடை இனிதே முடிவுறுகின்றன. விளைச்சலைச் சுமந்து உழைப்பாளிகள் வீடு நோக்கி நடக்கிறார்கள்.

அழகுகள் பலவிதம். சிலவற்றைச் சொற்களுள் அடக்கிவிடலாம். சிலவற்றைக் கவிதையாய் வடித்து உணர்த்திவிடலாம். ஆனால் செந்நெல் வயல் அறுவடைக் காட்சியின் அழகோ ஏட்டிலும் அடங்காது; பாட்டிலும் அடங்காது. அது பார்க்கும் விழிகளுக்கே புலப்படுகின்ற பேரழகுக் கோலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உள்ளத் தனையது உயர்வு'

இலையும் குழையும் அணிந்த ஆதி மனிதன் இன்று அணுவைப் பிளந்துவிட்டான். ஏழ் கடலைக் கடந்து அகன்ற அண்டத்திலும் தன் காலடிகளைப் பதித்து விட்டான். 'இன்னும் உயரவேண்டும்' என்ற எண்ணமொன்றே மனிதனை விலங்குகளினின்றும் வேறுபடுத்தியது. ஏற்றம் மிகு வெற்றிபெற்ற உயிரினமாக வரலாறு எழுத வழி வகுத்தது இந்த உயர்ச்சியானது தனிமனித முயற்சிகளின் ஒருங்கிணைந்த உழைப்பினால் முகிழ்த்த விளைவேயாகும்.

ஒவ்வொரு தனிமனிதனும் தனது உயர்வினைக் கருதியே கடமை புரிகின்றான். ஏழையொருவன் செல்வனாவதை நோக்காகக் கொண்டு செயல் புரிகின்றான். கல்லாதவன் கற்றுணர்ந்த அறிஞனாவதற்குச் கடுமையாக உழைக்கிறான். அறிஞன் மேன்மேலும் அறிவுடைப் பேரறிஞனாகப் பொலிவதற்காக பணிபுரிகின்றான், ஒவ்வொரு வர்க்கத்தினரும் தன்னிலும் மேம்பட்ட இன்னோர் உயர்நிலையை அடைவதையே நோக்காகக்கொண்டுள்ளனர். அவ்வாறெனின் உயர்வின் எல்லைதானேது?

இந்தக் கேள்விக்குத் தேவர் திருக்குறள் தெள்ளிய பதில் ஒன்றைத் தருகின்றது. அது மட்டுமல்ல உயர்வானது ஒவ்வொருவருக்கும் ஏன் வேறுபட்ட அளவுகளில் நிகழ்கின்றது எனும் வினவுக்கும் விடைதருகின்றது இக்குறள். உயர்வினைச் சொல்லும் அக்குறள்.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

ஆம்! உள்ளம் எத்துணை உயர்ந்ததாக இருக்கிறதோ அவ்வுள்ளம் உடையவனின் உயர்வுகளும் அத்துணை உயர்ந்தவையாக இருக்கும் என்கின்றார் திருவள்ளுவர். அவ்வாறெனின் உள்ளத்தை உயர்த்துவது எவ்வாறு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த எண்ணங்களான அன்பு, அறம், ஈகை போன்றவற்றைக் கைக்கொள்ளும் போது அவ்வுள்ளமும் உயர்ந்ததாகின்றது.

இதனாற்றான் வள்ளுவர் பெருமான் வேறோரிடத்தில் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கிறார். உள்ளத்தின் கண்ணெழும் எண்ணம் யாவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்; தன்னையும் பிறனையும்பற்றிய சிந்தனைகள் தாழ்வில்லாது இருக்க வேண்டும் என்கின்றனர்.

உயரமான வரப்பு ஒன்று எவ்வாறு அதிக நீரைத் தேக்கி அதிக விளைச்சலைத் தருகின்றதோ அவ்வாறே உயர்ந்த உள்ளமும் நல்லியல்புகளைத் தேக்கி வாழ்வில் உயர்நிலையை அடைய உதவுகின்றது.

உயர்ந்த உள்ளத்தின் இயல்புகள் வாக்கினில் ஒளியை உண்டாக்கும். நடத்தையில் நம்பிக்கையை உருவாக்கும். உறவுகளைப் பெருக்கும். பகைமைகளைப் போக்கும். இருளான எண்ணங்களை அழிக்கும். அன்பும் அருளும் நிறைந்த மனோநிலையைத் தோற்றுவிக்கும். எல்லோரும் இறைவனின் குழந்தைகளே எனும் இனிய நினைவைத் தரும். ஆற்றாமை, அவசரம், அநீதியான எண்ணம் போன்றவற்றை அழித்துவிடும். அமைதியான, ஆனந்தமான ஓர் உயர்வின் எல்லைக்கு இட்டுச்செல்லும்.

ஒவ்வொரு தனிமனிதனின் அடைவுகளும் அவன் உள்ளத்தெழும் உணர்வுகள் அள்ளிவழங்கிய செல்வமேயாகும். உயர்ந்த உள்ளமுடையோர் வாழ்வு உந்நதமாக இருக்கின்றது. தாழ் சிந்தையுடையோர் வாழ்வு வெறுமையாகிப் போகிறது. இது காவியமும் இதிகாசமும் காட்டுகின்ற ஒரு விதி; இன்றைய வரலாறு எழுதுகின்ற ஒரு செய்தி.

இதையே அன்று 'எண்ணமே வாழ்வு' என்று திண்ணமாகச் சொன்னார்கள். 'நல்லது நினை; நல்லது நடக்கும்' என்றனர். இந்த நம்பிக்கை விதியைத் தம் சந்ததியில் விதைத்தனர். 'கேடு நினைப்பான் கெடுவான்' என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரித்தனர். தீயதைச் செய்வதல்ல, நினைப்பது கூடத் தீங்காகும் என எச்சரித்தனர்.

அன்றைய நாள்கள் ஆராயும் அறிவு உச்சம் பெறாதவை. ஆயினும் அன்றி எம் ஆன்றோர் சொன்னவை இன்று மனோதத்துவவியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளவை. 'எண்ணமே செயலின் உயிர்நாடி' என்று உறுதியாக உரைக்கப்படுகின்றது.

எண்ணங்களைப் பிறப்பிக்கும் உள்ளமே உடலை இயங்கப் பணிக்கின்றது. ஆத்மாவின் கண்ணெழும் அபிலாசைகளை அடையச் செய்கின்றது: மீளமீள உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும் எண்ணமே ஒருவனை உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலையை அடைய வழிவகுக்கின்றது.

பிரபஞ்சத்தில் எல்லையற்ற ஒரு சக்திக் களஞ்சியம் உண்டு அது ஆழமாகச் சிந்திக்கும் செயல்களை ஆற்று வதற்கெனச் சக்தியை வழங்கவல்லது என இன்றைய உள வியலாளர் உரைக்கின்றனர்.

மீள மீள எண்ணப்படுகின்ற ஒரு செயல் நினைவு களில் ஆழப்பதிகின்றது. எண்ணங்களை வரம்பிட்டு வழி காட்டுகின்றது. அதன்மூலம் உடலை, அவ்வெண்ணங் களைச் செயலாக்குமாறு தூண்டுகின்றது. அதிக ஈடுபாட் டுடன் ஆற்றப்படும் செயல்கள் வெற்றியளிக்கும் நிகழ் தகவைக் கூட்டுகின்றன. இதனால் தொடர்ந்து செயல் ஆர்வத்தை அதிகரிக்க வைக்கின்றன.

எவ்வாறாயினும் உள்ளத்தில் உள்ளும் எண்ணங்களே எம்மை வழிநடத்துகின்றன. உலகம் போற்றும் உத்தம ராக்குகின்றன. அன்றேல் அகிலத்தை அழிக்கும் அதர்மர் களாகவும் ஆக்குகின்றது. எண்ணக் கடிவாளத்தை இறுகப்பற்றி உள்ளக் குதிரையைச் செலுத்தினால் நாம் செல்லும் பாதைகளை வரலாறு சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பயணம் செய்த கப்பல் பாறையில் மோதிச் சிதறியபோது...

நீலக்கடல் காலப்பெருவெளி போல் ஆதியும் அந்தமும் இல்லாது காட்சியளித்தது. கவிழ்த்த கிண்ணம்போல விரிவானவெளி பரந்து கிடந்தது. எங்கள் பயணக்கப்பல் மாகடல்மீது விரைந்து மிதந்து கொண்டிருந்தது தூரத்தே சில வலைஞர்கள் அலைகளின் இடையே அவர்தம் வள்ளங்களில் அசைந்து கொண்டிருந்தனர். உழைப்பிற்காக உயிரைத் துச்சமென மதிக்கும் அம்மீனவர்களின் நிலைகண்டு வேதனையுற்றேன். காற்றுத் திரிக்கும் நீர்க்கயிறுகளாய் கடலின் மேற்பரப்பில் தோன்றும் அலை அழகைச் சொல்ல வார்த்தைகள் தானேது? இவ்வேளையில் என்னைப்பற்றிச் சொல்லி விடுகிறேன். நான் ஓர் எழுத்தாளன். பணத்தில் கனமான குடும்பத்தைச் சேர்ந்தவன். வெவ்வேறு திசைகளுக்கும் பல்வேறு மார்க்கங்கள்மூலம் பயணம் செய்து என் அநுபவங்களைத் தொகுத்து ஓர் அற்புதப் படைப்பைச் செய்யும் முயற்சியில் இறங்கியிருக்கிறேன். அதன் விளைவினாலான பயணமே இது. கதைகளில் மட்டும் கேள்விப்பட்ட மரகதத்தீவினை நேரில் தரிசனம் செய்யத் துணிச்சலுடன் புறப்பட்டிருந்தேன்.

அன்று எமது கப்பல் மேற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது, இரவின் வரவுகூட என் கவிதா மனத்திற்கு இன்பமாகவே இருந்தது. தனிமை எனக்கு மிகவும் இனிமையாக இருந்தது. மையிருள் வானில் அள்ளித் தெளித்த வெள்ளிப் பூக்களாய்த் ''தாரகை'' எனப்படும் தங்கச் சிமிழ்கள் ஒளிர்ந்தததை இரசித்தேன். அப்போது சீதளத் தென்றலின் குளிர் பொறுக்க முடியாததாய் இருந்தது.

திடீரெனக் கப்பற்றளத்தில் ஒரு கலவரத்தை உணர்ந்தேன். மேல் கீழ்த் தளங்களில் ''தட தட'' என்ற சப்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கத் தொடங்கியது. எமது கப்பலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாயும் திசை மாறிக் கப்பல் சென்று கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. சில நிமிஷங்களின் பின்னர் நிலைமை சடுதியாக மாறியது. கப்பல் தன்னிலை அற்றுத் தத்தளிக்கத் தொடங்கியது. இயன்றவரை மிதக்கும் உபகரணங்களை எடுத்துக் கடலினுள் குதிக்குமாறு ஒலிபெருக்கி அறிவிப்பு ஆணையிட்டது. வயது வேறுபாடின்றிய பரிதாப ஓலம் பெரிதாய் எழுந்தது. அனைவரும் செயற்பட்டோம். இயன்றவரை ஏனையோருக்கு உதவி செய்ததில் நான் அபாய அறிவிப்பைத் தொடர்ந்து சடுதியாக நீரினுள் பாய்ந்தேன் பொலித்தீனில் பத்திரப்படுத்திய என் பயணக்குறிப்புகள் மட்டுமே என்னிடம் இருந்தன. மிதப்புபகரணம் ஏதும் என்னிடமில்லை. நான் நீருட் குதித்த மறுகணம் எமது கப்பல் பாறையில் மோதிச் சிதறியது.

தொடர்ந்து சில விநாடிகளில் எமக்கு வான்படை உதவி கிடைக்குமென்பது தெரிந்திருந்தும் மிதப்பு உபகரணமின்மையால் நீந்திக் கொண்டே இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானேன். அலைகள் என்னைத் தள்ளிய திசைக்குச் செல்லலானேன் கைகள் சோர்ந்தன; கால்கள் சோர்ந்தன. காரிருளும் கடலுக்கே உரிய அலையோசையும் தவிர எதுவும் உணர முடியவில்லை. ஆண்டவனைத் தவிர வேறேதும் நினைவில் இல்லை.

அவ்வேளையிற் தற்செயலாக மிதந்து வந்த மரக்கட்டையைப் பற்றிக்கொண்டதனால் என்மனத்து ஓரமெல்லாம் உற்சாகக் குமிழ்கள் உருவாகத் தொடங்கின. ஒரே துடிப்பு. உயிர்காக்கும் தீவிரமான இறுதித்துடிப்பு. அதுவே என்னை நீந்தவைத்தது. அலைகளின் திசையில் என் பயணம் தொடர்ந்திருக்கிறது மயங்கிய விழிகள் மூடிக் கிடக்க நான் கடலலைகளால் நகர்த்தப்பட்டிருக்கிறேன் நாழிகைகளும் தம்போக்கில் நகர்ந்ததும் தெரியவில்லை.

விடியற்பொழுதில் என்விழிகள் திறந்தபோது வெண் மணல் கரையோரம் ஒதுக்கப்பட்டிருந்தேன். வெம்மை கலந்த வெயிலவனின் கிரகணங்கள் என்னைத் தீண்டின. மண்ணின் வருடல் மனத்துக்கு; சுகமாயிருந்தது. கடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன இரவின் நம்பமுடியாத ஞாபகங்கள் மனதினுள்ளே கோவையாய் அணிவகுத்தன. என் எழுத்துப் பொக்கிஷங்கள் இழக்கப்படாததே மனதிற்குப் பேராறுதல் தருவதாயிருந்தது.

பசியெனும் உணர்வை விரட்ட எண்ணி எழுந்து நடந்தேன். ஆளரவமற்ற அப்பிரதேசத்தில் அழகு ஆட்சிசெலுத்திக்கொண்டிருந்தது. பசுந்தளிர்ப்பூமியாய்ப் பெருமரங்கள் நிறைந்திருந்தன. அற்புத அழகுடன் வண்ணப்பூக்கள் எண்ணுக்கணக்கின்றி எங்கும் மலர்ந்திருந்தன. கனி வகைகளும் தனி அழகுடன் பொலிந்தன. பசும்மரங்களின் நடுவே மென்நீலச் சுனையொன்று இருந்தது. மானினங்கள் மிரண்ட பார்வையுடன் நீரருந்தி மீண்டன. எனக்கும் அவ்வேளையில் அச்சுனைநீர் சுவைதரும் பானமாய் இலங்கியது.

கடந்த நிகழ்வின் அநுபவங்களை நான் எழுதிக் கொண்டேன். அவ்வழகுப்பிரதேசம் பற்றிச் சிலகுறிப்புகள் எடுத்தேன். பிரிவின் பெருந்துயர் என்னை வாட்டியபோது மீண்டும் என் தாயகத்திற்குத் திரும்ப முடியும் என நான் நம்பினேன்.

பச்சைக்குழைகளால் என்னைப் போர்த்தியபடி நான் பெருமரங்களில் துயின்றேன் இச்சையுற்றபடி கனிவகைகளுண்டு பசி ஆறினேன். இவ்வாறாக இருநாட்கள் கழிந்தன. நுரைமோதும் கரையோரத்தில் நான் நின்றபோது ஓர் ஆபத்துதவிகளின் படகு என்னைநோக்கி வந்தது. நான் மீட்கப்பட்டேன். தொலைநோக்கிப் பிரயாணி ஒருவர் தற்செயலாக என்னைக் கண்டதால் எனக்கு இவ்வுதவி கிடைத்ததாகப் பின்னர் அறிந்து கொண்டேன். இறைவனின் அளவிறந்த கருணையை உணர்ந்து கொண்டேன். நீலக் கடல்மீது எம்கப்பற் பயணம் தொடர்ந்தது. கோல அழகு குவிந்திருந்த இயற்கையை இரசித்த என் மனம் ஆனந்தகீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஓர் எழுத்தாளரானால்......

நான் ஓர் எழுத்தாளரானால்......... நினைத்த பொழுதிலே மனமெல்லாம் ஒரே மகிழ்வு உடலிலும் கூடப் புது உற்சாகம் பரவுவதை உணர்கின்றேன். தொடர்ந்து வந்த கற்பனைகளோ, அடர்ந்ததொரு காட்டருவியாய்ப் பெருக்கெடுக்கின்றன. கட்டவிழ்த்தோடும் மனக்குதிரையின் பின்னே நானும்......

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பது ஆன்றோர் ஆக்கிய பொன்மொழி. எண்ணென்பது கணிதமாகவும் எழுத்தென்பது மொழியாகவும் மிளிர்கிறது. கணிதமோ அன்றிக் கலையோ எதுவும் தனித்து இயங்கிப் பயனே இல்லை. இயந்திர உலகினுள் எழுத்துப் புகுந்து கொள்கின்ற போதுதான் அழகுணர்ச்சி பிறக்கிறது. அழகுணர்ச்சியே அன்பு, பண்பு, கருணை, பொறுமை போன்ற நற்பண்புகளுக்கு வித்தாக உள்ளது ஆகவே, ஒழுக்கம் கொண்ட அழகிய உலகத்தை எழுத்தின் மூலமாக அமைக்க முடியும். இத்தகைய பெருமை மிக்க எழுத்தை ஆள்பவன் தான் சமூகத்தில் எழுத்தாளனாகப் போற்றப்படுகின்றான்.

எழுத்தாளன் என்பவன் நற்கருத்துக்களைச் சமூகத்திற்கு வழங்க வேண்டியவனாகின்றான். எனது ஆசை நிறைவேறினால்...... நானும் இயலுமானவரை நற்கருத்துக்களைப் பரப்புவேன். சிக்கலான சொற்கட்டுக்களால் என் சிந்தனையாற்றலை வெளிக்காட்டுவதில் எனக்கு எப்போதுமே சம்மதமில்லை. பழகிய வார்த்தைகளைக் கோர்த்துப் பாமரர்க்கும் புரியும்படி இலகு தமிழில் எழுதுவதே என் வழக்கமெனக் கொள்வேன். இனிய வார்த்தைகளைத் தேர்ந்து நான் படைக்கும் நூல்கள் எனக்குப் புகழும் பெருமதிப்பும் சேர்க்கும்.

''படைக்கப்படும் போது மனிதர்கள் சமமாகவே படைக்கப்படுகிறார்கள்''. என்பது அறிஞர் கூற்று. ஆனால் வளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற சூழ்நிலையில் மனிதன் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங் களாலேயே அவன் மாற்றமுறுகின்றான். ஆகவே குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் மனதில் பதியும் நல்லொழுக்கப் பாடல்களையும் கூட நான் இயற்றுவேன். ஏழைக்குழந்தை களாக இருந்தாலும் ஐந்தாம் வகுப்புவரை பெரும்பாலா னோர் பள்ளிப்படிப்பைமேற்கொள்கிறார்கள். இக்குழந்தை களுக்காகவும் பல நூல்களைப் பிரசுரித்து வழங்குவேன்.

இன்றைய எழுத்துலகத்தின் நிலை என்னை மிகவும் வருத்தப்படுத்துவதுண்டு ஏனெனில் பணத்தை அடிப்படை யாகக் கொண்டே இப்போது பல சஞ்சிகைகள், நாவல்கள் வெளியிடப்படுகின்றன. மலிவுவிலை மட்டுமல்ல, இவை மட்டமான ரசனைகளையுமுடையன. விற்பனைக்காக வேண்டி விரும்பத்தகாத படங்களையும் கூட இவற்றில் பிரசுரிக்கின்றார்கள். வயது வேறுபாடின்றி பலருமிதனால் பாதிப்புறுகின்றார்கள் இதற்கான உடனடி விளைவுகள் மறைமுகமானவையே. ஆனால் காலப்போக்கில் இவை நிச் சயமாகத் தீயவிளைவையே ஏற்படுத்தவல்லன. இவற்றைத் தணிக்கை செய்து தரமாகப் பிரசுரிக்கக் கிராமங்கள் நகரங் கள் தோறும் கழகங்கள் நிறுவுவிப்பேன் இவ்வமைப்புக்கள் இளம் எழுத்தாளர்களைத் தூண்டி நல்ல படைப்புக்களைச் சமூகத்திற்கு வழங்க உதவும். இக்கழகங்களூடாகப் பரந்த அளவில் அறநெறித்துண்டுப் பிரசுரங்களை ஆக்கி விநியோ கிப்பேன் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுடன் கையெழுத் துப் பிரதிகள் பல செய்து ஆலகங்கள், கிராமங்கள் தோறும் வலம் வரச் செய்வேன் இதனால் பல்வேறுபட்ட இரச னைகள், கருத்துக்கள் என்பனவும் சமூகத்துக்கு வழங்கப் படுகின்றன. இலைமறை காயாய்க் கிடக்கின்ற இளம் எழுத்தாளர்கள் இதனால் இனங்காணப்படுவார்கள்.

இன்னும் வேதங்கள் போல விளங்காத கடினத் தமி ழில் உள்ள நூல்களை இலகு தமிழில் மீள்பதிப்புச் செய் வேன். இதனால் ஆழ்கடல் முத்தன்ன அரும் பெரும் பொக்கிஷங்கள் பல வெளிச்சத்துக்கு வர இடமுண்டு அத் துடன் ஆன்மீகப் பேரொளியும் பரவ வழி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும்'' என்ற பாரதியின் குரல் என்னுள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. பல்வேறு மொழி ஆற்றல்களை வளர்த்து இதை நிறைவேற்ற நானும் முயல்வேன். இறவாத புகழுடைய புது நூல்கள் இயன்றவரை நான் செய்வேன்.

இருண்ட பிரதேசங்களில் எல்லாம் என் படைப்புக்கள் ஒளி வழங்கும் சூரியனாய் உலாவரும் அறிவியலிலும் கூட இயன்றவரை நூல்கள் எழுதுவேன். விஞ்ஞானப் புனை கதைகள், நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றை நற்கருத்துக்களை மையமாக்கி அமைப்பேன் நாடகங்கள் பல எழுதி முன்னேற்றக் கழகங்களின் உதவியுடன் அரங்கேற்றுவேன். என் ஆக்கங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் நல விளைவுகளினால் பெருநிறைவடைவேன்.

சமூகத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய கருத்துக்களை வானொலி, தொலைக்காட்சி என்பவற்றினூடாக இலகுவில் பரப்ப முடிகின்றது. எனவே என் கவிதைகள், சிறுகதைகள். நாடகங்கள் என்பனவற்றை இச்சாதனங்களின் உதவியுடன் சமூகத்துக்கு வழங்குவேன் இலக்கியத் தரம்மிகுந்த படைப்புக்களும் பல செய்வேன்.

எழுத்தாளனின் எழுதுகோல் போர்வாளிலும் கூரியது என்பார்கள். எங்கெல்லாம் தர்மத்தின் குரல்வளை நெரிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் என் பேனா போர் தொடுக்கும். இதனால் தீமைகளை எடுத்துக்கூறி சமுதாயமே திரண்டு தீங்குகளை எதிர்க்கச் செய்வேன் இன்றைய உலகில் யுத்த உணர்வுகள் தீவிரப்பட்டு வருகின்றன. அவை நீங்கி சமாதான ஒளி விரிந்து சந்தோஷம் நிலவ எனது படைப்புக்களும் துணை செய்யும்.

இன்னும் இன்னும் கற்பனைகள் உள. பிறப்பின் பயனை மேம்படுத்தவும் இறப்பின் பின்னும் அழியாது என் புகழ் ஒளி விரிக்கவும் சமுதாயத்தை வழிப்படுத்தவும் என் எழுத்துக்கள் உறுதியாய் உதவும் என்ற நம்பிக்கை உண்டு. நாளைய என் வெற்றியை காலம் பதிவு செய்யும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்

மனிதனதும் வேறு காரணிகளதும் செயற்பாடுகளின் விளைவாகப் பல பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை நியம மட்டத்தை மேவும்போது சூழல் மாசடைதல் ஏற்படுகின்றது. இதனால் பூமியானது பேரபாயத்தை எதிர் நோக்குகின்றது. இம் மாசடைதலானது நிலம், நீர், வளி ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலதிக ஒலியும் அதீத சக்திவாய்ந்த கதிர்களும் கூட சூழலை மாசுபடுத்து கின்றன.

முதலில், நிலம் மாசடைதலை எடுத்துநோக்குவோம். செயற்கை உரம், கிருமிகொல்லிகள், பீடைநாசினிகள் மற்றும் விவசாயத்துக்கான இரசாயனப் பொருள்கள் என்பன மண்ணில் செறிவுறுகின்றன. இதனால் மண்ணின் இயல்பு பாதிக்கப்படுகிறது மண்ணில் காரத்தன்மை அல் லது அமிலத்தன்மை ஏற்படுகின்றது. இதனால் மண் பயிர்ச்செய்கைக்குப் பொருந்துவதாக அமைவதில்லை. இந்த இரசாயன வளமாக்கிகள் மழையின்போது நீர் நிலை களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு நற்போஷ ணை நிலை ஏற்படுகின்றது நீர்ப்பரப்பின் மீது அல்கா மூடுபடை தோன்றுகிறது. ஆதலால் நீர்ச் சூழற்றொகுதி பாதிக்கப்படுகின்றது. மேலும் கால்நடைகளின் கழிவு சுயாதீனமாக மண்ணில் விடப்படுதலால் துர்நாற்றம். சிதைவு என்பன ஏற்படும் பிரிகைக்கு உட்படாத ''பிளாஸ்ரிக்'' (**plastic**) பொருள்கள், தொழிற்சாலைக் கழிவுகள் மண்ணில் தேங்குதலும் தீங்காகும் நோய் பரப் பும் அங்கிகளின் குடம்பிகளும் ஆங்காங்கு இருக்கும் குழி களில் தேங்கும் நீரில் பெருகுகின்றன. காடழித்தலால் வளி மண்டலத்திலே மாற்றம் ஏற்பட்டுப் பருவகாலச் சுழற்சியில் மாற்றம் ஏற்படுகின்றது. வளிமண்டலத்தில் காபனீரொட் சைட் அதிகரிக்கின்றது. இதனால் உலகளாவிய ரீதியில் வெப்பநிலை அதிகரிப்பு ஏற்படுகின்றது. இது ''முழு உல களாவிய வெப்பமுறல்'' எனப்படுகின்றது. மண்ணிற் தேங் கும் பார உலோகங்கள் உணவுச் சங்கிலி வழியே செறிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. இவ்வாறெல்லாம் மனிதன் பெரும் அபாயத்துக்கு உள்ளாகின்றான்.

நீர் மாசுறுதலை எடுத்துக் கொண்டால், தொழிற்சாலைக் கழிவுகள், வெப்பமடைந்து பதங்கெட்ட நீர் போன்றன நீர்நிலையை அடைவதால் நீர்நிலை மாசுறுகின்றது. நீர்வாழ் அங்கிகள் இறக்கின்றன. வெப்பமடைந்த நீரில் ஒட்சிசன் கரைவது குறைவாகையால் ஒட்சிசனை நம்பியிருக்கும் அங்கிகளுக்குப் பெருமளவு தீங்கு ஏற்படும். அணுகுண்டுப் பரிசோதனைகள் நீரில் நடத்தப்படுவதால் நீர்வாழ் உயிர்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்படுகின்றன. எண்ணெய்க் கப்பல்களிலிருந்து நீரில் விடப்படும் எண்ணெய்க் கழிவுகள் நீர்மேற்பரப்பில் ஒரு படையாக மிதப்பதால் ஒளியும் வளியும் செல்லுதல் தடைப்படுகின்றது. பார உலோகங்களான இரசம், செப்பு என்பன நீர்நிலைகளில் படியும்போது நீர்வாழ் உயிர்களின் உடலில் அவை சேருகின்றன. பின் கடலுணவுகள் மனிதனால் உள்ளெடுக்கப்படும்போது மனித உடலினுள் புகுகின்றன. இவை நச்சுத்தன்மையானவை. தீமை விளைவிக்கக் கூடியவை.

வளி மாசடைதலை நோக்கினால் பெருந் தொழிற்சாலைகளிலிருந்து கழிவுகளும் பக்கவிளைவால் ஏற்படும் பொருட்களும் வளிமண்டலத்திற்கு விடப்படுகின்றன. சீமெந்து, தூசி, நச்சுத்தன்மையான வாயுக்கள் அவற்றில் சிலவாகும். வாகனங்களின் எரிபொருட் புகை, காபனோரொட்சைட்டு, 'காபனீரொட்சைட்டு, ஈயவீரொட்சைட்டு என்பவற்றைக் கொண்டுள்ளது. காபனோரொட்சைட்டு வாயு, சுவாசத் தொகுதியில் நோய்களை ஏற்படுத்தும். கதிரியக்கப் பரிசோதனைகளால் அதீத சக்தி வாய்ந்த கதிர்கள் வளிமண்டலத்தை அடைகின்றன. விண்வெளிப் பயணங்கள், ஏவுகணைகளின் பயன்பாடு என்பவற்றின் போது வெளிவிடப்படும் புகையும் வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றது. இதனாலும் குளோரோ புளோரோக் காபனின் செயற்பாட்டினாலும் ஓசோன் படையில் துளை ஏற்பட்டு, அது விரிந்து செல்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசோன் என்பது பூமியை சக்திவாய்ந்த கதிர்களிட மிருந்து காப்பாற்ற இயற்கையாக பூமியைச் சுற்றியமைந்த பாதுகாப்புப் படையாகும். இந்த உந்நதமான இயற்கைப் பாதுகாப்புப் படையில் ஏற்பட்ட ஓட்டையானது பூமியின் உயிர்வாழ்வுக்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இத னால் புற ஊதாக்கதிர்கள் வடிகட்டப்படாமல் பூமியை அடைகின்றன.

இன்றைய உலகின் சனத்தொகை தீவிரமாகப் பெருகி வருகின்றது. மனிததேவைகளும் பெருமளவில் அதிகரித்துள் ளன. இதனால் குடியேற்றத்திட்டங்கள். கட்டடஉருவாக் கங்கள், சேனைப்பயிர்ச்செய்கைகள். வீதிவிஸ்தரிப்புக்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள் என்பனவும் அதிகரித்துள்ளன. ஆகவே காடழித்தல் மிகப் பெரும்பாலும் மேற்கொள்ளப் படுகின்றது. இதன் விளைவாக, வளிமண்டல காபனீரொட் சைட் அதிகரிக்கின்றது. எனவே துருவப் பனிக்கட்டிகள் உருகலாம். நீர்ப்பரப்புக் கூடி நிலப்பரப்புக் குறையலாம். இதற்குத் தீர்வாக மீளவளமாக்கலைத் தீவிரப்படுத்திக் காட ழிப்பைக் குறைக்கலாம்.

மேலதிக ஒலி, வெப்பம், சக்தி என்பன அவதிமட்டத் திலும் அதிகரிக்கும்போது இயற்கைச் சமநிலை குழப்பப்படு கின்றது. இது மனித விலங்குகளின் ஆரோக்கியத்துக்குத் தீங்கு பயக்கின்றது.

இவ்வாறான மாறுதலைத் தவிர்க்க இரசாயனப் பொருள்களின் பயன்பாடு குறைக்கப்பட வேண்டும். இயற்கை வளமாக்கிகளை அதிகளவில் பயன்படுத்த வேண் டும். தொழிற்சாலைக் கழிவுகளை மனித சுகாதாரத்துக் குட்பட்ட வழிகளில் வெளியேற்றுதல் நன்மை தரும். வாகன எரிபொருள்களாகப் புகை குறைந்த மூலப் பொரு ளைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். பத்திரிகை, வானொலி மூலம் அறிவுரை வழங்க முன்னேற்றக் கழகங் கள் முன்வர வேண்டும். காடழித்தல் இயன்றளவில் தடை செய்யப்பட வேண்டும். கைத்தொழில் விருத்திமிக்க இந்த யுகத்தில் இயலுமானவரை சூழல் மாசுறுதலைத் தடுக்க முயற்சிசெய்ய வேண்டும். இயற்கைச் சமநிலை குழம்பாது இனியதொரு பூமி உருவாக வழிசெய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியால் நிகழும் நன்மைகளும் தீமைகளும்......

[ உரையாடல் ]

**குமரன்:** என்ன நண்பனே...! அவசரமாக ஏதோ எழுது கின்றாய் போலிருக்கின்றது.

**உதயன்** உண்மைதான்; ஆசிரியர் நேற்றுத் தந்த வினாக் களுக்கு இன்னும் விடையளித்து முடிக்கவில்லை. அது தான், அவசரமாக எழுதிக்கொண்டிருக்கின்றேன். இதோ... முடிந்துவிட்டது!

**குமரன்:** நேற்றிரவே எழுதியிருந்தால், இப்படி அவசரப் படத் தேவையில்லையே!

**உதயன்** இரவு நேரம் தொலைக்காட்சியோடு கழிந்து விட்டது. அதனால்தான் எழுத முடியவில்லை.

**குமரன்:** எத்தனை தடவை உனக்கு இடித்துரைத்திருக் கின்றேன், தொலைக்காட்சி பார்ப்பது தீமை பல தரும் நிகழ்வென்று! இன்னும் நீ திருந்தியதாகத் தெரிய வில்லை!

**உதயன்:** இல்லை... நீ சொல்வதை ஏற்றுக்கொள்ள முடி யாது. தொலைக்காட்சி நமது அறிவை விசாலமாக்க உதவுகின்ற சாதனம் என்றால் மிகையல்ல.

**குமரன்:** இல்லை, மாணவர்களின் கல்விக்கான நேரங் குறைவதும், கலாசாரம், பண்பாடு என்பன குலை வதும் தான் தொலைக்காட்சியின் விளைவுகளாக இருக்கின்றன.

**உதயன்:** நீ கூறுவது ஆராய்ந்து கொள்ளாத முடிவெனக் கருதுகின்றேன். அண்டவெளியிலும், அகன்ற வானத் திலும், ஆழ்ந்த சமுத்திரத்திலும் சூழ்ந்து கிடக்கின்ற அறிவியல் உண்மைகள் அனைத்தையும் தொலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி அறியத் தருகின்றது. உலகின் எங்கோ ஒரு மூலையில் நிகழ்கின்ற அறிவுசார் நிகழ்ச்சிகளைக்கூட எம் கண்ணுக்கு விருந்தாக்குகின்றது.

**குமரன்:** இதே பணியைத் தீமை கலவாத வகையில் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஏன் - வானொலியும் கூடச் செய்கின்றது தானே! அவ்வாறிருக்கத் தொலைக் காட்சியே ஞானம் வளர்க்க ஏற்ற நல்ல வழி என்று நீ சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**உதயன்:** பத்திரிகையும் வானொலியும் சஞ்சிகையும் நல்லறிவு பரப்பும் சாதனங்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஒரு நிகழ்ச்சியைக் கண்ணால் கண்டு பின் எண்ணத் திரையில் கொண்டு வருவதை விடக் காதால் கேட்டு நினைவுகளில் தேக்கி வைப்பதை விடத் தொலைக்காட்சி மூலம் பார்க்கும் ஒரு காட்சி ஒரே சமயத்தில் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்து எண்ணத்தோடு பின்னிப் பிணைய வைக்கின்றது.

அத்துடன் இன்றைய தொலைக்காட்சிகளின் தொடர்பாடலில் செய்மதிகளும் உறுதுணையாக இருக்கின்றன தகவல்களை விரைவாக வினைத்திட்பமுடன் ஒளிபரப்புகின்றன. இத்தொழினுட்பமும் நயக்கத்தக்க ஓர் இயல்பாகின்றது.

**குமரன்** எத்தனையோ சிறுவர்கள், ஏன் பெரியவர்கள் கூடத் தங்கள் கல்விக்கான நேரத்தையும், தொழில் புரிவதற்கான காலத்தையும் தொலைக்காட்சி பார்ப்பதனால் இழந்து விடுகின்றார்களே! அத்துடன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்ற திரைப்படம் போன்ற சில நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனால், இளஞ் சமூகம் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

**உதயன்:** உண்மைதான்! ஆனால், இத்தொலைக்காட்சி தான் உலகின் எத்தனையோ பகுதிகளிலுள்ள மக்களின் பண்பாடுகள், வாழ்க்கைமுறைகள் என்பவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றது. யாதும் ஊரே; யாவரும் கேளீர்! எனும் மனப்பாங்கை வளர்க்கத் துணை செய்கின்றது. அம் மக்களின் பழக்கவழக்கங்களில் சிறந்தவற்றை நாமும் பின்பற்ற வழிகாட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்துறையில் எவ்வளவோ முன்னேறி விட்ட நாடுகளின் ஆராய்ச்சிகள், தொழினுட்ப செயன் முறைகள் என்பனவற்றை அவதானிக்க உதவுகின்றது. எங்கள் சிறார்களின் எதிர்கால சந்ததியினரின் உள் ளத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஆழப்பதிந்து அவர் களுக்குச் செயற்படும் ஆர்வத்தினையும் தூண்டுகின்றன?

**குமரன்:** நீ சொல்வதிலும் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் அறிவியல் நிகழ்ச்சிகளை விடக் கேளிக்கை நிகழ்ச்சிகள் தானே பலராலும் விரும்பப்படுகின்றன.

**உதயன்;** இயந்திரமயமான இன்றைய வாழ்வில் மகிழ்ச்சி யாகச் சில பொழுதுகளைச் செலவழிக்க வேண்டியது அத்தியாவசியமானதே. ஆயினும் இத்தகைய நிகழ்ச்சி களில் அதிக நேரத்தை இழக்காதிருக்கப் பெரியவர் களின் வழிகாட்டுதல் அவசியமானதாகும்.

**குமரன்:** தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்ப்பத னால் அதிக எண்ணிக்கையானோர் குறைந்த வயதி லேயே கண் பார்வைக் குறைபாடுகளை எதிர்நோக்கு கின்றனர் எனப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றனவே!

**உதயன்:** உண்மைதான். ஆயினும், வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுவதன் மூலம் பார்வைக் குறைபாடு ஏற்படுவதன் சாத்தியத்தைக் குறைக்கலாம்

**குமரன்:** நீ கூறுவதைக் கேட்கும்போது தொலைக்காட்சி நன்மைகளையும் கொண்டிருப்பதாகத் தோன்றுகின் றது. நாணயத்தின் இருபக்கங்களைப்போல, நன்மை யும் தீமையும் இணைந்தேயுள்ளன.

**உதயன்:** வாழ்க்கை முழுதுமே அப்படித்தானே, நண்பா! நன்மையும் தீமையும் சமாந்தரமாகவே தொடர் கின்றன. நாமேதான் நன்மைதரும் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தொலைக்காட்சி விடயமும் அப்படித்தான். அதை நல்வழியில் பயன்படுத்துவது நம் கையிலேயே தங்கியுள்ளது.

**குமரன்;** உண்மைதான் நண்பனே! நேரமாகிவிட்டது. வா! புறப்படுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சந்தித்த விநோத மனிதன்

சென்ற சித்திரை விடுமுறைக்கு அன்பு நண்பன் நிர்மலன் வீட்டிற்குச் சென்றிருந்தேன் நகரத்தின் கண் அவனது வீடு மிகுந்த அழகுடன் பொலிந்தது. நல்ல நட்புக்கள் பழகும்தோறும் இனிமை தருவன. என்னுயிர் நண்பன் நிர்மலனுடன் கழித்த அவ்விடுமுறை, மிகுந்த சந்தோஷமாகவும் பயன்பாடுடையதாகவும் இருந்தது. வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கு நாம் மாமாவுடன் பயணஞ்செய்தது அறிவுக்கு நல்விருந்தாக அமைந்தது ஆனால் அவ்வேளையில் நான் கண்ட விசித்திர மனிதனின் கதையோ இன்றுவரை அதிசயம் தருவதாகவே உள்ளது.

அன்று..... நாம் காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு அன்பு நண்பனின் அம்மா தந்த நல்லுணவுண்டு வீட்டின் மேல்தளத்துக்குச் சென்றிருந்தோம். அங்கிருந்து பார்த்தால் நகரத்தின் முக்கியமான நாற்சந்தி தெளிவாகத் தெரியும். ஆகவே வழமைபோல, அங்கிருந்து பரபரப்பு நிறைந்த வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். நவரசக் கூச்சல் மிகுந்ததாய்க் காலைப் பொழுது காணப்பட்டது. அவரவரும் தத்தம் வேலைகளில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தார்கள். மனித வாழ்க்கைதான் எத்துணை கடமைப்பாடுடையது பொறுப்புடையது; பிச்சைக்காரர்களிலிருந்து பெருந்தனக்காரர் வரை பலதரப்பட்ட மனிதர்கள் வீதியில் காணப்பட்டார்கள்.

திடீரென இனிமையானதொரு ஊதுகுழலொலி எம் கவனத்தை ஈர்த்தது. நகரத்து நாற்சந்தியில் பல வர்ண உடை அணிந்த முதிய மனிதர் ஒருவர் ஊதுகுழலை ஊதிக்கொண்டிருந்தார். அவரது தோற்றம் அதிசயிக்கத்தக்கதாக இருந்தது. மறுகணமே நாம் கீழ்த்தளத்திற்கு இறங்கி, அன்னையாரின் அனுமதியுடன் குறித்த நாற்சந்தியைஅடைந்து விட்டோம். அப்போது அவரைச் சுற்றிலும் சிறு கூட்டம் கூடியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த விசித்திரமான அவரது உருவமே அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது. வானவில்லின் வர்ணங்களிற் கணிசமானவை சேர்ந்ததாய் 'ஜீன்ஸூம்' முழுக்கைச் சட்டையும் அணிந்திருந்தார். வெள்ளி நரைகளில் நடுவே ஆங்காங்கே எட்டிப் பார்க்கும் கறுப்புக் கேசம்! ஒளிர்வு மிகுந்த சின்ன விழிகள்! குறுந்தாடி! வெண்ணிறமான கண்ணிமைகள்! நெடிதாக உயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றம்! அவரின் அருகில் விகடத்தனமான உடைகளுடன் இரு குரங்குகள் காணப்பட்டன. அவரது தோளில் அழகிய பஞ்சவர்ணக் கிளி ஒன்று உட்கார்ந்திருந்தது. ''வாருங்கள்; அன்புமிகுந்த வந்தனங்கள்' என்று இனிய குரலில் கூறி வரவேற்றுக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் திரண்டு கொண்டிருந்தது.

மெதுவாக நகர்ந்த விசித்திர மனிதர் ஊதுகுழலுடன் அருகிலிருந்த நகரசபை மைதானத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார். திரண்டிருந்த மக்கள் கூட்டமும் தம்மையறியாது பின் தொடர்ந்தது. விசித்திர மனிதர் தன் கைப்பெட்டியைத் திறந்து விட்ட பின்னர் ஊதுகுழலினை இசைக்க ஆரம்பித்தார். அதனுள்ளிருந்து வெளியேறிய பாம்பொன்று இசைக்கேற்ப நடனமிடத் தொடங்கியது. மக்கள் கூட்டம் பின்வாங்க இடைவெளியில் ஒரு வட்டப் பிரதேசம் உருவாகிக் கொண்டிருந்தது. அந்த இடைவெளியில் சிறு குரங்கு ஒன்று நின்று நடனமாட, மறுகுரங்கு கூட்டத்தினுட் புகுந்து கட்டணம் வசூலிக்கத்தொடங்கியது. அதன் கைகளிலிருந்த அழகிய சிறு பேழையினுள் சில்லறைகள் குலுங்கிக் கொண்டிருந்தன. மீண்டும் மீண்டும் அப்பேழையைக் குலுக்கிப் பணம் சேர்த்த குரங்கைக் கிளி தனது ஆணைகளால் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. கிளி கூறும் கட்டளைகள் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தன. எத்துணை லாவகமான ஒருங்கிணைந்த செயற்பாடு இது! நான் விழிகள் வியப்பால் விரியப் பார்த்துக் கொண்டிருந்தேன் ஆனால் நிர்மலனின் முகமோ சலனம் ஏதுமின்றிக் காணப்பட்டது.

பார்வையாளர்களில் பல தரப்பட்டோர் இருந்தார்கள். சிலர் பகட்டாக உடை உடுத்தும் பணம் தருவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தார்கள். அவர்களைக் கிளி பரிகாசம் செய்தது. சிலர் நகைச்சுவையாகப் பேசி ஏமாற்ற முயன்றார்கள். அவர்களை அது ஏளனம் செய்தது. தேவையான பொழுதுகளில் கோபமாகப் பேசியது. மிரட்டியது. அது பெரும் அதிசயக் காட்சியாக இருந்தது. இனிமையான ஊது குழலொலியின் பின்னணியில் நடைபெற்ற நடனம் இனிதே முடிவுற்றது. அப்போது கூட அந்த அதிசயமனிதர் புன்னகையுடனேயே விடை பெற்றார். ஒரு வார்த்தை தானும் அவர் பேசினாரில்லை.

கூட்டம் சிறிது சிறிதாய்க் கலையத் தொடங்கியது. எல்லோர் வாயிலும் அந்த மனிதரைப் பற்றியே பேச்சு! சிலர் அவரைப் 'பிழைக்கத் தெரிந்தவன்' என்றார்கள். சிலர் 'பித்தலாட்டக்காரன்' என்றார்கள். வேறு சிலர் 'பாவம்' என்று கூறிப் பரிதாபப்பட்டார்கள். இவ்விமர்சனங்களைக் கேட்ட நான் அவரைப்பற்றி நண்பனிடம் வினாவினேன். நிர்மலனுக்கு ஏற்கனவே அவரைப்பற்றி நன்கு தெரிந்திருந்தது.

நிர்மலன் சொன்ன செய்திஅந்த முதியவர் தோற்றத்தில் மட்டுமன்றி குணத்திலும் அதிசயமானவர் என்பதை எடுத்துக்காட்டியது. 'அவர் ஒரு பிறவி ஊமை. சேவைகளில் மிகுந்த ஆர்வமுள்ளவர். இவ்வாறு பல்வேறுபட்ட கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் பயணஞ்செய்து பணம் சேர்த்து அநாதை விடுதிகளுக்குக் கொடுத்து வருகின்றார்'' என நண்பன் தொடர்ந்தான். சுயநலம் மிகுந்த இந்த மனிதர்களிடையே இப்படியும் ஒரு மகத்தான மனிதரா! இவ்வுலகிலே இயன்ற போதிலும் தர்மம் செய்யாதாரே அதிகம். இவரோ முயன்று உழைத்து அவற்றை அநாதைகளுக்கு ஈகை செய்யும் பேரன்புடையவர். அந்த மனிதரை வாழ்த்திய எனது மனதில் அவரைப்பற்றி நீங்காத ஒரு அதிசய உணர்வே நிறைந்து காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கனவு

அற்புதமான அந்த நாவலை வாசித்து முடித்துவைக்கும்போது நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டதை உணர்ந்தேன். விளக்கணைத்துப் படுக்கச் சென்றபோது கூட சிந்தனைச் சிதறல் அந்த விந்தை மிக்க விஞ்ஞான நாவலை விட்டு விலக முடியாது தத்தளித்தது. எத்துணை அற்புதமான கற்பனைச் சித்திரம்! எண்ணக் கண்ணாடியில் மீண்டும் மீண்டும் அந்த விம்பங்கள்! அந்த விஞ்ஞான நவீனத்தின் கதாநாயகனைப் போல விண்வெளியைச் சுற்றி வர எனக்குமொரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்ற ஏக்கம் ஏக்கத்தின் பிரதிபலிப்பாக ஆழ்ந்த பெருமூச்சொன்று பிறந்து மறைந்தது. எங்கள் தேசத்தில் விண்வெளிப் பயணம் சாத்தியமாவதற்கு இன்னும் எத்தனை காலம் செல்லுமோ என நினைத்து சலிப்படைந்த வேளையிலே தான் அந்தச் சத்தம் காதுகளை அதிரவைத்தது.

'டொக்......டொக்......டொடொக்...!'

நெஞ்சினினுள் சிலிர்த்துப் பரவிய அச்சத்தை விரட்ட முயற்சித்தேன். 'யாராயிருக்கும்...... இந்த அகால வேளையில்......' எண்ணத் தொடரைச் சிதைத்தவாறே மீண்டும் எழுந்தது அந்தச்சத்தம்......'டொக்...டொக்...டொடொக்'

பூட்டிய கதவுள் நின்று கலவரமடைவதை விட, கதவைத் திறத்தலே உத்தமம் எண்றெண்ணினேன். தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்தேன். அங்கே... கண்ணைக் கூச வைக்கின்ற நீல ஒளியுடன் ஓர் உருவம்...... விஞ்ஞானம் பயின்ற என்னால் சுயமாக ஒளிவீசுகின்ற உயிரியொன்றைக் காண்பதனை நம்பவே முடியவில்லை. திறந்திருந்த கதவினுள் ஓரடி பின்வாங்கினேன்.

அடிவயிற்றிலிருந்து 'சில்'லென்ற உணர்வு எழுந்து உடல் முழுக்கப் பரவுவது போலிருந்தது. வாயைத் திறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரக்கச் கூச்சலிட வேண்டும் போல் இருந்தது. அவ்வேளை யில்...... அவ்வுருவம் மெல்லிய குரலில் பேசத் தொடங் கியது.

''வணக்கம், சிறு மனிதனே! நீ சற்று முன்பு வரை எதிர்பார்த்து ஏங்கிய எண்ணத்தைச் செயலாக்குவதற் காக, XZ-011 கிரகத்திலிருந்து நாம் வந்திருக்கிறோம். உன்னுடைய ஆர்வமான எண்ண அலைகள் எங்களைத் தாக்கியதால், நாங்கள் உன் உணர்வுகளையும் இருப் பிடத்தையும் அறிந்துகொண்டோம். எதையும் அறிவதற்கு ஆர்வம் மிகக் கொண்ட உன்னை, எங்கள் விருந்தாளியாக அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றோம். உடன் புறப்படவும்'' என்று கூறி நிறுத்தியது

எனக்கு என்ன பதிலைச் சொல்வதென்றே புரிய வில்லை. கோளப் பூமியைத் தாண்டி நீலவானத்தில் நீந்தி அண்டப் பரப்புகளை அளந்து பார்ப்பதற்கு ஆர்வம் தூண் டியது. ஆயினும், பெற்றவரின் அனுமதியைப் பெறாமல் போவதா என்றெண்ணிக் கலங்கினேன்

என்னைப் புரிந்துகொண்டாற்போல, ''அஞ்சாதே, சிறுமனிதா......! எங்களுடன் வருவதாகச் சிறு குறிப்பு வரைந்து வைத்து விட்டு நீ வரலாம்'' என்றது அவ்வுருவம்.

நானும் பிரச்சினையிலிருந்து விடுபட்டாற்போல மகிழ்ந் தேன். அன்புப் பெற்றோரின் அனுமதி வேண்டிச் சிறு குறிப்பு எழுதி மேசையில் வைத்தேன். கதவைத் தாளிட்டு, முன்னே சென்ற உருவத்தைப் பின்பற்றி நடந்தேன். அந்த நட்ட நடுநிசிப் பொழுதின் அமைதி என் மனதில் அச்சத்தைப் பிறப்பித்தது. அதையும் விஞ்சிய ஆர்வம் காரணமாகத் தொடர்ந்து நடந்தேன்.

சற்றுநேரத்தில் நாங்கள் ஓர் அரைக்கோள வடிவான ஊர்தியொன்றினை அடைந்தோம். அதனுள் மேலும் சில அந்நியக் கிரகவாசிகள் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அவ்வுருவங்களில் ஒன்று நீல ஒளி வீசுகின்ற ஓர் உடையை எனக்கு அணிவதற்காய் அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாய் அவ்வுடையை வாங்கி அணிந்தேன். பின் அவ்வுருவத்தின் கட்டளைப்படியே அந்த ஊர்தியுள் ஏறி அமர்ந்து கொண்டேன். பேரிரைச்சலுடன் ஊர்தி தரைக்குச் செங்குத்தாக மேலெழுந்து விரையத் தொடங்கியது. உயர்மரங்கள், கட்டிடங்கள், மென்பஞ்சுமேகங்கள், எல்லாவற்றையும் கீழே தள்ளிக் கொண்டே ஊர்தி மேலே மேலே சென்றது.

சற்று நேரத்திலேயே வண்ணக்கோளங்கள், கண்சிமிட்டும் விண்மீன்கள், அநாதியாய்ப் பரந்த அண்டவெளி... என் .வற்றைக் கடந்து ஊர்தி விரைந்தது அந்தக் காட்சிகளைக் கண்டு பிரமித்தவாறே நான் அமர்ந்திருந்த வேளையில்... திடீரென ஒரு சமிக்ஞை ஒலி எழுந்தது.

அப்போது அச்சம் மிகக் கொண்ட அந்த உருவம் என்னை நோக்கி "நாங்கள் தவறுதலாக தூசியாலான எல்லையற்ற ஒரு பெருங் கருங்கோளத்தினுள் பிரவேசித்து விட்டோம். இனி உன்னுடைய பூமிக்கோ அல்லது எங்கள் கிரகத்துககே மீண்டுசெல்ல முடியாது" என்றது நடுங்கும் குரலில்

எல்லையற்ற அச்சமும் அதிர்ச்சியும் என்னைச் சூழ "அம்மா... ஆ... ஆ..." என்று கதறியபடியே விழுந்தேன் கண் முழுதும் கருமை நிறைந்தது போல எங்கும் ஒரே இருள்! மெல்லத் தலையை நிமிர்த்தியபோது .. கண்ணில் சிறு அகல் விளககுத் தென்பட்டது. கருங் கோளத்தினுள் யாரது விளக்கேற்றி வைத்தது?

அச்சத்தின் மத்தியிலும் மனத்துள் கேள்வி எழுந்தது. தலையைச் சற்று நிமிர்த்திச் சுற்றுமுற்றும் பார்த்தேன். குழப்பத்துடன் கைகளை ஊன்றி நிமிர்ந்தேன். தலையில் 'நச்' செனப் பலமான அடி! 'கருங்கோளத்துக்கும் கூரை உண்டா?' மேலே உற்றுப் பார்த்தேன்.

அப்போதுதான் நான் கட்டிலின் கீழே கிடப்பதையும் இதுவரை நான் கண்டது அற்புதமான ஒரு கனவென்பதையும் உணர்ந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் பெரியார்

காலங்கள் தோறும் உலகில் மகான்கள் பலர் உருவாகின்றார்கள். உலகினை நல்வழிப்படுத்துகின்றார்கள். வளம்மிகுந்த வையகத்தை உருவாக்கத் தமது வாழ்வை அர்ப்பணிக்கின்றார்கள். செயற்கரிய செயல்கள் செய்து மக்களின் சிந்தைகளிலெல்லாம் நிறைந்திருக்கின்றார்கள். இம் மேன்மைமிகு மகான்களின் வரிசையில் தன்னம்பிக்கையின் சிகரம் எனப் பலராலும் போற்றப்படுகின்ற சுவாமி விவேகானந்தரே என் மனங்கவர்ந்த பெரியார் ஆவார்.

இவர் 186 ஆம் ஆண்டு தைமாதம் பன்னிரண்டாம் நாள் மண்ணுலகின் தவப்பயனாய்க் கல்கத்தாவில்வந்துதித்தார். இவரது பெற்றோர் விசுவநாததத்தரும் புவனேசுவரி அம்மையாரும் ஆவர். நரேந்திரர் என்பது இவரது இளமைப் பெயராகும். நரேந்திரனின் தந்தையார் நிகரில்லாக் கொடையாளியாக விளங்கினார். வரையறையற்று அனைவருக்கும் வாரி வழங்கினார். இதனால் அவரது குடும்பம் வறுமையின் எல்லைக்கோட்டைத் தொட நேர்ந்தது. எனினும் வறுமையிலும் செம்மையாக நரேந்திரர் வளர்ந்தார்.

சின்னஞ்சிறு வயதின் பருவத்திலேயே, நரேந்திரர் நிறைந்த ஆளுமைப் பண்புகளை உடையவராயிருந்தார். சிறுவர்கள் கூட்டத்தின் தலைவராக விளங்கினார். இளவயதிலேயே அறிவின் தெளிவும் அபார ஆற்றலும் இவரது உடைமைகளாக இருந்தன. எந்நூலையும் இருமுறை படித்தால், அவற்றை மிகுந்த விளக்கத்துடன் வரிபிசகாது மனனம் ஆக்கிவிடும் இயல்பு இவரிடத்திலிருந்தது. இதனாலே தனித்திறமையுடன் பலராலும் போற்றுதற்குரியவராகத் திகழ்ந்தார். அஞ்சாநெஞ்சங்கொண்ட இவர் சிலம்பம், வாள், மல்யுத்தம் போன்ற பயிற்சிகளிற் சிறந்து விளங்கினார்.

உயிரினங்கள் மீது இதயபூர்வமான அன்புகொண்டவர் இவர். சிறுவயதிலேயே மனத்தை ஒருமுகப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம் இவருக்கு இலகுவான கலையாக இருந்தது. இத்தகைமைகளே பிற்காலத்தில் மனித குலத்திற்கும் சமயத்துக்கும் அளப்பெரும் சேவைகளின் மூலமாக அமைந்தன.

இளம் வயதில் இராமகிருஷ்ண பரமஹம்சருடனான இவரது சந்திப்பு ஆன்மீக வரலாற்றின் முக்கிய நிகழ்வாகும்.] இராமகிருஷ்ணரைக் குருவாகக் கொண்டதனால் இவரது ஆன்மீக ஒளியும் அறிவொளியும் கூர்விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்தது. நீர்க்குமிழியன்ன நிலையற்ற வாழ்வில் நிலையான சக்தியிடம் தம்மை அர்ப்பணித்தார். குருவானவர் சிவபதமெய்திய பின் சிஷ்யர் கூட்டத்தை வழிப்படுத்தும் தலைவராக விளங்கினார்.

இவர் நர்வன்மையில் ஈடிணையற்று விளங்கினார். இந்து மதத்தின் புகழ் நலிந்திருந்த காலத்தில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளால் இந்துசமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழ்ப் பண்பாட்டின் செழுமையும் இந்து மதத்தின் இறைமையும் செழிக்க பல்வேறு தேசங்களுக்கும் யாத்திரை செய்தார். வேதாந்தம் போதிக்கும் நல்லாசானாய் உலகெங்கும் உரைகள் நிகழ்த்தினார்.

1893ஆம் ஆண்டு சர்வமத மகாசபையில் இவர் ஆற்றிய உரை இவரை உலகப்புகழ்பெற்ற போதகராய் மாற்றியமைத்தது. பெருந்தொகையான மத போதகர்களும் மக்களும் நிறைந்த அரங்கிலே சுவாமி விவேகாநந்தர் ''அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே'' என்று விளித்துத் தனது சொற்பொழிவை ஆரம்பித்தார். அவ்வார்த்தையில் இன மத நிற வேறுபாடுகள் அழிந்து போயின. சகோதரத்துவம் சிறந்து பொலிந்தது. வேற்றுமை காட்டாத இந்து மதத்தின் சீரிய பண்பு உந்நதமாக உணர்த்தப்பட்டது. சுவாமிஜியின் பேச்சாற்றல் பலரையும் இந்து மதத்தின் பால் தீவிரமாகக் கவர்ந்தது இந்தியாவின் பண்பாடும் ஆன்மீக உயர்வும் தேசமெங்கும் புகழப்பட்டன. தமிழ்த் தாயின் தவப்புதல்வனால் இந்துமதப் புகழ் விரியத் தொடங்கியது.

இவர் பெருந்தொகையான இந்து மதமுன்னேற்றக் கழகங்கள், ஆச்சிரமங்கள் என்பவற்றை நிறுவினார். ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி அகிலமெங்கும் பரவும்படி, பல நன்னூல்களைச் செய்தார். "ஞானதீபம்", "கீதைசொல்லும் பாதை" என்பன இதற்குச் சிறந்த சான்றுகளாகும். "எழுந்து கொள்ளுங்கள்; விழித்துக் கொள்ளுங்கள்; தீமைகளுக்கு எதிராகத் துணிந்து போர் புரியுங்கள்" என்று மக்கள் சமுதாயத்திற்கு அறைகூவல் விடுத்தார். "உள்ளம் தளராதே; முயற்சி செய்; உன்னால் எதுவும் முடியும் - தீவிரமாக முயற்சி செய்; வெற்றி உனதே" என இளஞ் சமூகத்தை உற்சாகப்படுத்தினார். 'அஞ்சாதே! அச்சம் உன்னை இழிவு படுத்தும். அதை உதறி எறி. வாழும் காலம் யாவும் துணிச்சலுடன் வாழ்' என்று முழங்கினார். இவரது சொற்களில் இளைய சமூகம் நிமிர்ந்து கொண்டது. உலகின் ஞானக்கண்கள் திறந்து கொண்டன. ஆன்மிகப் பேரொளி பேரழகுடன் விகர்சிக்கத் தொடங்கியது.

இவரது நன்நோக்கப் பயணங்களில் ஒன்றாக 1899ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். "பரிசுத்த பாரத பூமி" "இந்துமதம்" "சமய வாழ்வில் சகிப்புத்தன்மை" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வின் நூற்றாண்டு நிறைவையொட்டி 1997 ஆம் ஆண்டு இலங்கை அரசு விவேகானந்தரின் உருவ முத்திரையை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. இந்த ஞானவீரர் 1902 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆந் திகதி இப்பூவுலக வாழ்வை நீத்தார். அவரது புகழோ தினமும் ஓங்கிக் கொண்டேயிருக்கின்றது.

நிமிர்ந்த கம்பீரமான இவரது தோற்றம்! கூர்ந்த அறிவினை விளக்கும் தெளிந்த விழிகள்! எந்தத் தீமையையும் தகர்த்து விடும் இளஞ்சிங்கம் போன்ற நெஞ்சுறுதி! உயிரினம் மீது கொண்ட பேரன்பு! இவையெல்லாம் என்றென்றும் பசுமையாக எம்மிடையே வாழும்.

"அறிவிலே தெளிவு; நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்......"

என்ற பாரதியின் கூற்றுக்கு வரைவிலக்கணமான இவரது வீரமும் ஞானமும், தன்னம்பிக்கையும் என்றென்றும் எம்மை ஊக்குவிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரையின் சுயசரிதை

இன்று நான் பாவனைக்கு உதவாத பொருட்களில் ஒன்றாகப் பழைய தளபாடமாகப் படுத்திருக்கின்றேன். இருண்ட நினைவுகளுடன் மனதினுள் வருந்தி அழுதபடி, என் வாழ் நாட்களை விரட்டிக் கொண்டிருக்கின்றேன். 'பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல்' இளமைக் காலத்து இனிய நினைவுகளை மீட்டி ஆறுதலுறுகின்றேன்.

அன்று...... நான் அம்பாறை மாவட்டத்திலுள்ள அடர்ந்த தேக்கங் காடொன்றின் பெருவிருட்சமாகத் தலை நிமிர்ந்து நின்றிருந்தேன். பசுமையும் செழுமையும் நிறைந்த வனத்தில் மனமகிழ்வுடன் மாபெரிய மரமாய் நின்றேன். காலத்தின் சுறைவில் வெட்டுமரம் ஆக்கப்பட்டேன். பின் மரத்தளபாட நிறுவனம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்டேன். அங்குதான் நானும் எனது ஐந்து தோழர்களும் உருவாக்கப்பட்டோம். மிகுந்த வேலைப்பாடு மிக்க எமது புதிய பிறப்பின் போது நாம் பட்ட கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. ஆனால் பல்வேறுபட்ட ஆயுதங்களின் உதவியுடன் செவ்வனே ஆக்கப்பட்ட எமது அழகினைச் சொல்லி மாளாது.

எமது அங்கங்களில் நுணுக்கமான அலங்காரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எமது நான்கு பாதங்களுக்கும் பொன்னிறப் பூண்கள் அணியப்பட்டிருந்தன. அத்துடன் எமது இருக்கை மிக மிருதுவான 'குஷன்' கொண்டது. எமது செழுமையான நிறத்திற்குப் பூச்சிடப்பட்டதால் நாம் மேலும் மெருகூட்டப்பட்டோம். சுருங்கச் சொன்னால், பார்ப்போரை மீண்டும் ஒருமுறை பார்க்க வைக்கும் படியான பேரழகுடன் விளங்கினோம். எமது உடலில் முழுமையாக ஓர் அற்புத அழகு ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

சில நாட்கள் நகர்ந்தன. நாங்கள் பெரும் பணக்காரர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டோம். கடந்த ஐந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருடங்களின் முன்வந்த இனியதொரு இளங்காலைப் பொழுதில் எமது புதிய அரண்மனை வாழ்வு ஆரம்பமானது. எமது எஜமானர் ஒரு புகழ்பெற்ற கவிஞர் ஆவர். அத்துடன் பெரும் தமிழறிஞரும் கூட. வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கும் ஈகையில் அவருக்கு நிகர் அவரேதான். நாம் சாப்பாட்டு மேசைக் கதிரைகளாக இருந்ததால் பெரிதும் பயன்பட்டோம். எம்மில் இருந்து உணவு கொள்வதால் பலர் பெருமையுற்றார்கள். அம்மாளிகையின் செல்வச் செழிப்புக்கு நாமும் ஒரு சான்றாக விளங்கினோம். சந்தோஷமாக எமது வாழ்வு தொடர்ந்தது.

காலமலரின் வருட இதழ்கள் சில உதிர்ந்தன. ஒரு நாள் விதி எமது அயலவர் உருவில் எம்வாயில் கதவு தட்டியது. ஆனால் அதை அப்போது நான் அறிந்திருக்க வில்லை அழகிலும் அற்புதமான கலைவண்ணத்திலும் சிறந்த நாம் கண்டோர் யாவரினதும் கவனத்தைக் கவரும் விதத்தில் இருந்தோம். என் எஜமானரின் அயலவர் தமது வீட்டின் விருந்தினராக முக்கியமான அமைச்சர் ஒருவர் வரவிருப்பதாகக் கூறி என்னையும் தோழர்களையும் இரவலாகக் கேட்டார். எமது எஜமானர் கேட்டோர்க்கு இல்லையென்னாத கொடையாளி தானே! அவரும் எம்மை மனமகிழ்ச்சியுடன் கொடுத்து உதவினார். ஆனால் எம் வீட்டு எஜமானிக்கு இதில மனவிருப்பம் இல்லை.

அந்த விருந்தில் நாம் மட்டற்ற பெருமையுடன் இருந்தோம். மறுநாள் எமது சொந்த வீட்டிற்கு நாம் எடுத்துச் செல்லப்படும் போது அழகிய வேலைப்பாடு மிக்க எனது மேற்பாகம் உடைந்து விட்டது. நான் என் நண்பர் கூட்டத்திலிருந்து தனிமையாக்கப்பட்டேன். பிரிவின் துன்பம் என்னை வாட்டி வதைத்தது. ஆனால் இப்பிரிவு எனக்குப் புதியதோர் வாழ்வை ஆக்கித் தந்தது. வீட்டின் பின்புறத்து மாஞ்சோலையில் என் புதிய வாழ்வு ஆரம்பமானது.

வழமையான அந்தி வேளைகளில் என் வாழ்விடத்தில் மந்தமாருதம் தவழ்ந்து வரும். அத்துடன் பூங்குயிலின் கானம் அப்பொழுதினைப் பொலிவாக்கும் எனக்குச் சற்றே தூரத்தில், மாளிகையின் பக்கப்புறமாக இருந்த மலர்த் தோட்டம் மனத்திற்கு மகிழ்ச்சி தரும். பெரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாலும் பின்னேரப் பொழுதுகளில் எனது எஜமானர் என் மீது வந்தமர்வார். இயற்கையின் இனிய காட்சிகளில் நெகிழ்ந்து கவிதைகள் பல இயற்றுவார். அவற்றை எழுத்து வடிவத்திற்கு மாற்றுவதற்கு முன் தம் கணீரென்ற குரலில் பாடித் திருத்தங்கள் செய்வார். அவ்வாறான பொழுது களில் என் பெருமிதத்திற்கு அளவே இல்லை. ''நானே கவிதை யாத்தது போலப்'' பூரித்துப் போய்விடுவேன். அறிவின் தெளிவுடன் இணைந்த வாழ்வுதான் எத்துணை அற்புதமானது:

காலங்கள் மாறின. கோலங்களும் மாறின. இயற்கை யின் கரங்களாக மழையும் வெயிலும் என் மேனியைத் தீண்டின. பளபளத்த என் மேனிநிறம் மங்கத் தொடங் கியது. இளமையின் இணையிலா அழகு குன்ற ஆரம்பித்தது. என் மனப்பரப்பெங்கும் ஆழ்ந்த கவலைக் கோடுகள் அதி கரித்தன. ஆனால் காலமோ எதையும் கவனியாது தன் போக்கில் நடந்துகொண்டிருந்தது. முதுமையின் கோரப் பிடியினுள் என் வாழ்வு தொடர்ந்தது. அவ்வாழ்விற்கும் முற்றுப்புள்ளி விழுந்த கொடிய நாளும் வந்தது.

ஒருநாள்...... அங்கு வந்த எஜமானி வெறுப்புடன் என்னைப் பார்த்தார். அழகிய அச்சூழலுக்குப் பொருந் தாத என்னை வேலைக்காரரின் உதவியுடன் அங்கிருந்து அப்புறப்படுத்தினார். அன்று அவர்களின் செல்வச் செழிப் புக்குச் சான்றாக அங்கம் வகித்தேன். ஆனால் இன்று நான் அவர்களின் வீட்டின் பின்புறத்தில் இருக்கக்கூட அருகதையற்றவனாகி விட்டேன். வாழ்வு நிலையற்றது தான் என்பதை உணர்கின்றேன்.

இன்று நான் குவிந்து கிடக்கும் பழைய பொருட்களுள் ஒருவன். காலம் எனக்கு இறப்பை மெதுவாக அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறது. எனது மரணத்தை விரைவு படுத்தும் படி இறைவனை அன்றாடமும் மன்றாடுகின் றேன். எனக்காக நீங்களும் பிரார்த்திப்பீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறந்தநாள் வாழ்த்து**

சங்கத்தானை,
சாவகச்சேரி,
1997-01-01

இனிய நண்பன் இளங்கதிரவனுக்கு,

நாங்கள் நலம்; நாடுவதும் அதுவே. நிறைவான நல் வாழ்த்துக்களுடன் தொடர்கின்றேன்.

உன் அன்புக் கடிதம் கிடைத்தது. எம் பள்ளிப் பருவத்துப் பசுமை நினைவுகளை மீட்டியிருந்தாய். மனதிற்கு மிகுந்த சந்தோஷமாகவிருந்தது. உன் பரீட்சைப் பெறுபேறுகளின் சிறப்பையிட்டு எதிர்வருகின்ற உன் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடுவதாகக் குடும்பத்தினர் உத்தேசித்திருக்கும் செய்தி சொல்லியிருந்தாய்; மிக்க மகிழ்ச்சி. முதலில் மனம்நிறைந்த என் அன்புவாழ்த்துக்கள்!

நண்பா! நீ நற்பண்புகள் நிறைந்தவன். விளையாட்டு ரீதியிலும் கல்வி ரீதியிலும் இயல்பாக ஆற்றல் மிக்கவன். முகஸ்துதி அல்ல. முழுஉண்மை இது; உனக்கும் புரியும். உன்னை நண்பனாகப் பெற்றதில் எனக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் என்றுமுண்டு.

பாலர் பருவத்தில் எம்மைப் பாடசாலை இணைத்தது. சாதனைகள் பலவற்றுடன் நம் பள்ளிக்காலம் இனிதாய்க் கழிந்தது. நாம் நண்பர்கள் என்றில்லாது சகோதரர்களாகவே பழகினோம். இனிவரும் பிறந்த நாளில் தான் நானுன் அருகிலில்லை. ஆனால் என் அன்பு வாழ்த்துக்கள் என்றும் உனக்காக உண்டு. சிறப்பான உனது பெறுபேறுகள் இப் பிறந்த தினத்தை நிச்சயமாகச் சிறப்பிக்கும் என்பதில் ஐயமில்லை. என் பெற்றோரும் தங்கள் அன்பு ஆசிகளைத் தெரிவிக்கச் சொன்னார்கள்.

புகழ்பெற்ற ஓர் எழுத்தாளரின் கவிதை படித்தேன். இவ்வேளையில் அதனை உன்னுடன் பகிர விரும்புகிறேன். "பிறந்த நாள் விழா என்பது கடந்துபோன வயதின் சாதனைகளையும் வெற்றிகளையும் மீட்டுப் பார்த்து புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதைத் தொடங்குவதற்காகவே கொண்டாடப்படுகிறது'' என அவர் எழுதுகிறார். உன் இனிய நாளில் இவ்வுண்மையை அவதானிக்க முடிகிறதல்லவா?

இசையார்வம் மிக்க உனக்கு என் அன்புப் பரிசாக ஒரு வயலினை அனுப்பி வைக்கிறேன். இதை நீ மீட்டுந்தோறும் பிரவாகிக்கும் இனிமைபோல எங்கள் அன்பும் சிறக்குமென நம்புகின்றேன்.

நாங்கள் பழகிய பொழுதுகள் அழகியவை. அன்பானவை. அந்த அன்பு அடிப்படையில் நானுனக்குச் சொல்வதென்ன? இனிவரும் பிறந்த நாள்களிலும் உன் தனித்துவமான சாதனைகள் பெருக அன்பு வாழ்த்துக்கள்! நாளைய வரலாறு நிச்சயம் உன் வெற்றிகள் சொல்லும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

என்றென்றும் அன்புடன்
யுகசாதனன்

---

வினாக்கள்

(1) உமது நண்பனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கடிதம் ஒன்று வரைக (பக். 70)

(2) பத்திரிகைத் துணை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பக் கடிதம் வரைக. (பக். 72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.
22-01-1997

ஆசிரியர்,
"தமிழ்நாதம்" வார இதழ்,
கொழும்பு.

ஐயா,

**துணை ஆசிரியர் பதவி**

தங்களுடைய வாரஇதழ் வெளியீட்டின் துணை ஆசிரியர் பதவி வெற்றிடமாக இருப்பதாகத் தாங்கள் வெளியிட்டிருந்த விளம்பரத்தினைக் கண்ணுற்றேன். தாங்கள் வேண்டியிருக்கும் தகைமைகளைக் கொண்டுள்ளேன்.

நான் க. பொ. த. (உ/த) கலைத்துறையிற் பயின்றேன். க. பொ. த (உ/த), க. பொ. த.(சா/த) பரீட்சைகளில் தமிழ்மொழியில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளேன்.

பாடசாலை நாள்களிலும் அநேக தமிழ்த்திறன் போட்டிகளிற் பங்குபற்றிப் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். 'அகில இலங்கைத் தமிழர் சம்மேளனம்' நடாத்திய சிறுகதை, கவிதை, விமர்சனப் போட்டிகளில் பங்குபற்றி முதற்பரிசுகளைப் பெற்றுள்ளேன்.

மேலும் கடந்த இருவருடங்களாக உள்ளூர்ப் பத்திரிகையான தினமலரில் பகுதிநேர எழுத்தாளனாகவும் பணிபுரிந்துள்ளேன். 'தமிழமுது' 'வெற்றிவாழ்வு' முதலிய வார இதழ்களில் என்னுடைய பல ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1973-06-04 இல் பிறந்த எனது வயதும் தாங்கள் குறிப்பிட்ட வயதெல்லையுள்ளேயே அமைகின்றது.

மேற்கூறிய என் கூற்றுக்களினை உறுதிப்படுத்தும் முகமாக இக்கடிதத்துடன் சான்றுப் பிரதிகளையும் இணைத்து அனுப்புகின்றேன். தங்களால் இப்பதவிக்காகத் தேர்வு செய்யப்படுவேனாயின் என்னால் முடிந்தவரையில் சிறப்பாகக்கடமை புரிவேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

தங்கள் பணிவுள்ள
ச. ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தையை இழந்த நண்பனுக்கு ஆறுதல் கூறுகின்ற வகையில் ஓர் கடிதம் வரைக.**

**அனுதாபக் கடிதம்**

'திருத்தணிகை'
கோயில் வீதி,
நல்லூர்.
*1996, பங்குனி 27*

அன்பு நண்பன் ஆதித்தனுக்கு,

இறைவன் உனக்கு மன ஆறுதலைத்தர வேண்டித் தொடர்கின்றேன்.

உனக்கு நேர்ந்த இழப்பு பற்றிய செய்தியை இன்று தான் கேள்வியுற்றேன். மனத்தில் துன்ப உணர்வைப் பெரிதும் உணர்கின்றேன். உனது தந்தையாரை வாகன விபத்தில் இழந்ததாகவும், நீ பாடசாலைக்குக் கூடச் செல்லாது வீட்டிலே முடங்கி வேதனையுடன் நாட்களை நகர்த்துவதாகவும் அறிந்தேன்.

அது பெரும் துன்பந்தான். ஆனால் என் செய்வது? விதியின் கையிலே விளையாட்டுப் பிள்ளைகள் தானே நாம்! காலமெனும் காட்டாறு நமக்குப் பெரும் வெற்றிகளை மட்டுமன்றி இழப்புக்களையும் தந்துதான் விடுகின்றது, இது பாரிய இழப்புத்தான். ஆனால் உலகியல் வாழ்வில் உயிர் இழப்புக்கள் இயற்கையே. ஆறுதல்கள் சொல்வது சுலபம். ஆனால் தேறுதல் அடைவது கடினம் என்பதை நானும் உணர்ந்திருக்கின்றேன். எனினும் நண்பா! நீ இந்த இழப்பிலிருந்து தேறத்தான் வேண்டும். உனக்கான எதிர் காலத்தை நீ கவனிக்கத் தானே வேண்டும்.

குடும்பத்தில் மூத்த பிள்ளையான நீ மனந்தளர்ந்தால் உங்கள் குடும்ப வாழ்வே கனமாகிப் போகும். தந்தையாரின் பின்னர் உங்கள் குடும்பத்தை ஒளி விளங்கும்படி உருவாக்கும் பொறுப்பு உனக்குண்டு என்பதை நீ உணர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் பாடசாலைப் போட்டிகள் பல வற்றிலும் வெற்றியீட்டியவன் நீ. நடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார். ஆதித்தா! உன் வெற்றிகளில் தந்தை கொண்ட ஆத்ம திருப்தியை நினைத்துப் பார். உன் தந்தை யாரின் கனவை நிறைவேற்றும் உறுதியை இழந்து விடாதே. எதிர்காலத்தில் நீ ஓர் வைத்தியராகிப் பலரும் புகழ வாழ வேண்டும் என்ற அவரது ஆசையை நீ நிறைவேற்ற வேண்டும்.

ஆதித்தா! விதி போடும் பாதையில் வெவ்வேறு பய ணங்கள். மதி கொண்டு பார்த்தால் எம் கையில் ஏது மில்லை. மனிதனாகப் பிறந்தவன் இயலும் வரை முயலத் தான் வேண்டும். வரலாறு வெற்றி சொல்ல வைக்கின்ற கல்வியை நாம் வாழும் காலம் முழுதும் தொடரவேண்டும். என் ஆறுதல் மொழிகள் உன்னைத் தேறுதல் செய்யும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

உனது அன்பு நண்பன்

**அறிவழகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதணிகளை அனுப்பக்கோரி ஒரு நிறுவனத்தின் கணக்காளரால் அனுப்பப்படும் வகையில் ஓர் கடிதம் வரைக.

அனுப்பாணைக் கடிதம்

'மக்' நிறுவனம்,
யாழ்ப்பாணம்.
1997-1-10

விற்பனைப் பிரதிநிதி,
பாட்டா கம்பனி,
கொழும்பு.

ஐயா,

தங்கள் நிறுவனம் 96-10-10 இல் 'வீரகேசரி' மூலம் வெளியிட்ட விலைப்பட்டியல் சார்பாகப் பாதணிகளை மொத்தமாகக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளோம். இந்த அனுப்பாணையைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுமிடத்துப் பொருள் அனுப்புதல் தொடர்பான மேலதிகச் செயற்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

தேவையான பாதணிகளின் விபரப்பட்டியல்:

| வகை | அளவு | தேவை | பட்டியற்படி விலை |
|---|---|---|---|
| 'பாட்டா' | | | |
| ஆண்களுக்குரியது | இல-5 | 100சோடி | ரூ. 7000 |
| | இல-6 | 150சோடி | ரூ. 13.500 |
| | இல-7 | 25சோடி | ரூ 2.500 |
| பெண்களுக்குரியது | இல-5 | 200சோடி | ரூ. 20000 |
| | இல-6 | 50சோடி | ரூ. 5.500 |
| 'ஸ்ரார்' | | | |
| சிறுவர்களுக்கானது | இல-3 | 200சோடி | ரூ. 20000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் 'பாட்டா' கறுப்பு/நீலநிறங்களை எதிர்பார்க்கின்றோம். பெண்களுடையது வெண்ணிற அல்லது வேறு நிற கலவை கொண்ட கறுப்புப் பாதணிகளாக இருப்பது விரும்பத்தக்கது 'ஸ்ரார்' பாதணிகள் வகைக்கு குறித்த எண்ணிக்கையுடையதாக எல்லா நிறத்திலும் இருப்பது நல்லது.

பொதிகள் கப்பல் மூலம் அனுப்பப்படுவதற்கான அனுமதியை நமது கொழும்பு பிரதிநிதி பெற்றுத்தருவார்.

தாங்கள் இந்த அனுப்பாணையை ஏற்றுக் கொள்ளுமிடத்து மொத்தக் கட்டணம் ரூ. 68, 500/- உடன் கப்பற்கட்டணம் ரூ. 500 ஐயும் தங்களுக்குச் செலுத்த உறுதி கூறுகின்றோம்.

கொடுப்பனவுகள் யாவற்றையும் இலங்கை வங்கி யாழ் பிரதான கிளை க/கு இல. 16682 மூலம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

தங்கள் பதில் கண்டு எங்கள் செயல் தொடர்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**ச. குமரன்**

(கணக்காளர் பாட்டா நிறுவனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானொலியின் உரத்த சத்தம் காரணமாகக் கல்விக்கு ஏற்படும் இடையூறினை நீக்குமாறு பொலீஸ் அதிகாரிக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்று வரைக.**

முறைப்பாட்டுக் கடிதம்

'பாலபவனம்'
பெரியமாடி,
சாவகச்சேரி.
1997-02-04

பொறுப்பாதிகாரி,
பொலீஸ் நிலையம்,
சாவகச்சேரி.

அன்புடையீர்,

**வானொலி இடையூறு பற்றிய முறைப்பாடு**

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆண்டு 11இல் கல்வி கற்கும் ச. யுகசாதனா ஆகிய நான், வானொலியை உரத்த தொனியில் பயன்படுத்துவதால் ஏற்படும் இடையூறினைத் தவிர்க்கும் முகமாக இம் முறையீட்டை அனுப்புகிறேன்.

எமது சூழலில் பெரும்பாலும் மாணவர்களும், அலுவலக உத்தியோகர்த்தர்களுமே வசிக்கிறார்கள். இவர்கள் விமர்சனங்களோ வீண்சண்டைளோ இன்றித் தத்தம் போக்கில் வாழ்பவர்கள். ஆனால் ஒரு வாரத்தின் முன்னர் எமது அயல் வீட்டில் வாடகைக்குக் குடிவந்த திரு. மு. கந்தசாமி என்பவர் இதற்கு மிகவும் முரண்பாடாக இருக்கின்றார்:

வழமையாக, இவர் வானொலியை உரத்த தொனியில் பயன்படுத்துகின்றார். இதனால் பலரும் சிரமமுறுகிறோம். குறிப்பாக நம்வீடு அயலிலுள்ளதால் பெரும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நாங்கள் தனித்தும் கூட்டாகவும் சென்று எடுத்துக்கூறியும் அவர் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை. வற்புறுத்திக் கூறினால் வீண் சண்டைக்கு வருகிறார். இவ்வேளையில் அவர் குடிப்பழக்கம் உடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். நண்பர்களு டன் சேர்ந்து பகல், இரவு வேளைகளில் இவர் செய்யும் அட்டகாசங்கள் பொறுக்க முடியதாவை.

எனது முனைப்பான கல்விக்கு நான் அமைதியை மிக வேண்டி நிற்கிறேன். நான் மட்டுமன்றி அயலவர்களும் வேலைக்களைப்பின் பின் ஓய்வெடுக்க அமைதி மிகத்தேவை. ஆகவே, தயவு செய்து இப்பிரச்சினைக்குத் தாங்கள் ஆவன செய்து உதவும்படி தாழ்மையாக வேண்டிக் கொள்கிறேன். தாங்கள் மிகுந்த வேலைப்பளுவினை உடையவர் ஆயினும் கல்விக்குஉதவுமுகமாக இவ்வுதவியைக் காலந்தாழ்த்தாது செய்வீர்கள் என நம்புகின்றேன்.

நன்றி!

இவ்வண்ணம்
தங்கள் உண்மையுள்ள
ச. யுகசாதனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியறிவித்தல் கடிதம்

கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
10-01-1997

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய திருமதி. ஞானசம்பந்தர் அவர்களுக்கு—

இவ்விடம் நாங்கள் நலமேயுள்ளோம். தங்கள் நலம் சிறக்க இறைதுணை வேண்டி மடலைத் தொடர்கின்றேன்.

மேலும் நான் தங்கள் வீட்டிலிருந்து புறப்பட்ட அன்று மாலையே என் இல்லம் வந்து சேர்ந்து விட்டேன். தங்கள் வீட்டில் நான் தங்கியிருந்த நாள்கள் என்றும் என் நினைவில் நிறைந்திருப்பவை. தங்கள்மகன் என் பள்ளித்தோழன். ஆயினும் தங்கள் குடும்பத்தில் அவனையன்றி யாரையும் அறிந்திராத என்னை, இன்முகத்தோடு வரவேற்று, மனம் மகிழ உபசரித்த தங்கள் பண்பு போற்றுதற்குரியது.

தனது இல்லத்தில் ஒரு வார விடுமுறையைக் கழிக்குமாறு என் நண்பன்-தங்கள் புதல்வன் வேண்டியபோது மகிழ்வுடன் அதற்கிசைந்தேன். ஆயினும், தங்கள் இல்லம் வந்தடைந்தபோது என் மனத்திருந்த குழப்பம் சொல்லுந்தரமன்று. இதற்குமுன் எங்கும் இவ்வாறு தங்கிய அநுபவங்கள் இல்லையாதலால் நெஞ்சம் சிறிது கலங்கியது.

ஆயினும் நாளொன்று கழிந்த போது தங்கள் இன்முகமும் இனிய விருந்தோம்பலும் தங்களை என் அன்னையாகவே எண்ணவைத்தன. ஒவ்வொரு நேரமும் தாங்கள் சுவையோடு அளித்த விருந்து நாவை நிறைத்தது. பேசுகின்ற வேளையெல்லாம் நீங்கள் சொன்ன அறிவுரைகள், என் சிந்தையை வளர்த்தன.

தங்கள் இல்லத்தில் தங்கிய என் விடுமுறை நாள்கள் வீணாகாது புதுநெறி தந்த பொன்னாள்களாய் அமைந்தன.

சிரமங்களைப் பொருட்படுத்தாது, சிரத்தையுடன் என்னையும் தங்கள் செல்வனாகவே கருதி, இன்முகத்துடன் உபசரித்த தங்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றிகளைக் கூறி விடைபெறுகின்றேன்.

என்றும் தங்கள் அன்புமறவாத
ம. நர்த்தனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org